# முதுவேனிற் பதிகம்

திருமாவளவன்

10922 CC

7

பொதுசன நூலகம்

பொதுசன நூலகம்
29 APR 2014
மாநகரசபை யாழ்ப்பாணம்

# முதுவேனில் பதிகம்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

பொதுசன நூலகம்
29 APR 2014
மாநகரசபை யாழ்ப்பாணம்

# முதுவேனில் பதிகம்

236593

திருமாவளவன்

236,593 CC.

| | |
|---|---|
| முதுவேனில் பதிகம் | Muthuvenil Pathikam |
| (கவிதைகள்) | (Poem) |
| திருமாவளவன் | Thirumavalavan |
| முதற்பதிப்பு: யூலை 2013 | First Edition: July 2013 |
| © திருமாவளவன் | © Thirumavalavan |
| வெளியீடு: மகிழ், | Published by MAHIZH |
| 754, கனகராசா வீதி, | 754, Kanagarasa Road |
| திருநகர் வடக்கு, கிளிநொச்சி | Thirunagar North, Kilinochchi |
| இலங்கை. | Sri lanka. |
| மின்னஞ்சல்: thiruma23@gmail.com | Email: thiruma23@gmail.com |
| அட்டை வடிவமைப்பு: றஷ்மி | Cover: Rashmy |
| உள்வடிவமைப்பு: பிரதீபன் | Layout: Piratheepan |
| நூலாக்கம்: ரீஜீ | Printed by: tg |
| விலை: 200 ரூபா | Price: Rs.200/- |

## திருமாவளவன்

இயற்பெயர் கனகசிங்கம் கருணாகரன். 1955 இல் யாழ்ப்பாணம் வருத்தலைவிளானில் பிறந்தார். தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் கல்வி கற்று, இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனத்தில் கட்டடத் தொழில்நுட்ப மேற்பார்வையாளராகப் பணியாற்றினார். 1990களில் புலம்பெயர்ந்து தற்பொழுது கனடாவில் வசித்து வருகிறார். இதுவரையில் பனிவயல் உழவு (2000)
அஃதே பகல் அஃதே இரவு (2003) இருள் - யாழி (2008) என மூன்று கவிதை நூல்கள் வெளியாகியுள்ளன. இது நான்காவது தொகுதி. கனடாவிலிருந்து வெளியாகிய “ழ”கரம் (1996-97) சிற்றிதழின் இணையாசிரியராக இருந்தார். பத்திகளையும் எழுதிவருகிறார்.

தொலைபேசி இல: 416 886 9991
ஈ-மெயில்: thiruma23@gmail.com

அம்மாவுக்கு...

## காப்பு

என் ஊர் மூலம்
முதிர் மாமருது
வானுற ஓங்கி விரிசடை பரப்பி
முறுகித் திரண்டு
வேருக்குள் உறுதிகொண்ட முதல்வன்
முன்னோர் தொடங்கி
என் ஊர் இருக்கும் வரையிலும்
மரமெனக் கருதார்
தெய்வம் என்றே கையெடுத்து தொழுத மருதன்.
மாமுனிவன்.
உன் வேர்முகம் மனதிருத்தி
இச்சிறு வினைக்கருமம் தொடங்கினேன்
தேவரீர்!
நீயே இதற்கு காப்பு.

பதிகம் 01

# தபசு

அன்றிலிருந்து....

பசி மறந்தேன்
தூக்கம் மறுத்தேன்
திசையின்றி அலைதல் விரும்பிற்று மனம்
சூனியத்தில் விழிகளின் தேடல்
கனவுகள் மட்டும் பெருகிக்கொண்டே வந்தன
எனக்கான சிலுவையை நானே புனைந்தேன்
வற்றத் தொடங்கிற்று காலம்
இனிக் காத்திருப்பு சாத்தியமில்லை
எனக்கு வெளிச்சம் வேண்டுமாயின்
என்னை
நான்
எரித்துத்தானே ஆகவேண்டும்

• 20 பெப்பிரவரி 2009

பதிகம் 02

# கனவுகளின் மேய்ப்பன்

1.
பனிவயல்
வெள்ளைக் கடல்
நடுவே
குடைசாய்ந்த படகு
என்
சிறு குடில்

2.
குளிர் பாலை
புதுப்புலத்தில் புதுவருடப் பெருவிழா
நகர் முழுவதும் விடுமுறைக் குதூகலம்
மீளாத் துயரோடு எனதூரில் மனசிருக்க
நடைப்பிணமாய் அலைகின்ற

அகதிப்பயல் நான்
மின் குமிழ் ஆடையில் விறைத்த
மரம்
என் விழியில் பாடையிலே அலங்கரித்த
பிணம்

3.
முற்றத்து வெளியில்
வெறும்பனி கிளறி உணவு தேடுகிறது
கறுப்பு அணில்
முதுகில்
ராமர் தடவிய கோடுகள்?
இல்லை
அழித்து அழித்து எழுதுகிறது
காலம்

4.
கணப்பியில் தீ
ஒரு மிடறு விஸ்கி
குந்தியிருக்கிறேன்
குளிர்காய
நான் போர்க்குள் உழன்றது
ஒரு பதினெட்டு ஆண்டுகள்

துருவப்பனியில்
உறைந்தன
மறு பதினெட்டு ஆண்டுகள்
நெடு நீள யுகம்
இப்பொழுதில் வேண்டுமானால்
என் தலை முடியை சாயமிட்டு மூடலாம்
உறை காலத்தை
மீட்பதெங்ஙனம்?

5.
தொலைக்காட்சித் திரையில்
மின்னும் உடைகளை
ஒவ்வொன்றாய் அவிழ்த்தெறிகிறாள்
இரவு மங்கை
தீர்ந்து போன தீப்பெட்டி போல
நாட்காட்டியின் நிர்வாணம்
சுவர்த்தட்டில் புத்தன்
சிலை
மூடிய விழி
இதழ்க்கடையில் குறுநகை
இது சாந்தமா?
அன்றில் பரிகாசமா?

6.

பன்றிக் கூட்டமென பெருக்கெடுக்கும் கனவுகள்.
வெறுவெளிவானில் ஓட்டிச்செல்லும்
கவிஞன் நான்
கனவுகளின் சுமை உறுத்துகிறது
முதிரக் கனவுகளை
ஒவ்வொன்றாய்
காவு கொடுக்கிறேன்
காலத்தின் கரங்களில்
இருந்தும்
துவண்டுவிடவில்லை
என்றோ ஒருநாள்
என்
பறவைகளால் நிறையும் வானம்

- ஜனவரி 2009

பதிகம் 03

# இரவு

என்னோடு விழித்திருக்கிறது இரவு
கருநீல இருள் நெடுநீள மௌனம்
இருட்பெண்ணின் சாயமிட்ட கீழ் உதடு
தொங்கும் பாதி நிலவு
இருளின் விழிகள் எரியும் நட்சத்திரங்கள்
எரிந்துகொண்டிருக்கும் இரவின் நெருப்பில்
என்னை மூட்டுகிறேன்
கசடுகள் அற
ஒளிரும் நட்சத்திரங்களெனச் சுடர்விட்டு எரிகிறேன்
முடிவில்
இரவின் மொழி குழைவு இருளில் ஒளி அழகு
உறவின் உச்சம் மகிழ்வு
இருவர் கிண்ணங்களிலும்
இருளின் ரசத்தை ஊற்றினேன்
கிண்ணத்துக்குள் பெருகி வழிகிறது
வற்றாத இரவு
பெருங்கடல்

• 12 மார்ச் 2010

பதிகம் 04

# பிரிவு

பறவைகள் எல்லாம் போய்விட்டன
காற்றின் திசையில் அலைகிறது
பறவையின் சிறகிலிருந்து தவறிய ஒற்றைத் தூவல்
உதிரும் இலைகளால்
தன் துயரைப் பாடுகிறது மரம்
கொம்பரில் இன்னும் மிச்சமாயிருக்கிறது
பறவைகளற்ற வெறுங் கூடு
இன்று
வெய்யில் இல்லை
கபில இருள் கூடி மூசாப்பாய் வானம்
பயணம் தாமதமானதா? வழி தவறி விட்டதா?
தெரியவில்லை
அகாலமாய்க் கத்தியபடி அலைகிறது
ஒற்றைப் பறவை
சன்னல் வழி சூனியத்தை வெறித்திருக்கிறேன்
பின்னாலிருந்து அழைப்பது யார்?
திடுக்கிட்டு திரும்புகிறேன்.
வெறும் பிரமை
அவள் இல்லை

• 17 மார்ச் 2010

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

பதிகம் 05

# புள்ளிசை கேண்மின்!

பிஞ்சுச் சூரியன் தவழும்
ஒவ்வொரு காலைப்பொழுதிலும்
உன் வீட்டின் சன்னல் சிறகுகளை
தன் அலகால் தட்டுகிறது
ஒற்றைப் பறவை
கொண்டையில் தீச்சுடர் வண்ணம் பளபளக்க
வீட்டைச் சுற்றிச் சுற்றி வருகிறது
அதன் தோகையழகில் மருகுகிறாய்
தினமும்
உன்னை துயிலெழுப்புவதாய் அதிசயிக்கிறாய்
ஒரு நாளிலாவது உன் சன்னல் திறந்து
அதன் மந்திரக்கூவலை ரசித்ததுண்டா?
கேள்!
அதனிடமிருக்கும்
பறவைகள் மொழியறிந்த கவிஞன் ஒருவன்
தன் கள்ளூறு மொழியில் வடித்த கவிதை
குறுந்தொகை
ஒரு கையகலச் செய்தி
சிறு விண்ணப்பம்

• 19 மார்ச் 2010

பதிகம் 06

## மனப்பட்சியுடன் வாழ்தல்

சிறு துளியுமகலாது
என்னோடு ஒட்டியபடி அலைகிறது மனப்பட்சி
பிடுங்கி
வெளியே எறியவும் முடியவில்லை
எப்போதும் என்னை எள்ளி நகையாடுகிறது
கோபம் கொண்டு திட்டித் தீர்க்கிறது
சிலசமயம் பரிகசிக்கிறது
நையப்புடைக்கிறது
பகைவனாய் நின்று எதிர்வாதம் புரிகிறது
ஒவ்வொரு கணமும் என்னை எச்சரிக்கிறது

எனக்காக பச்சாதாபப்படுவதும் கண்ணீர் விடுவதுமுண்டு
விடையளிக்க முடியா வினாக்களை எழுப்பி
நான் திகைத்திருக்கும் பொழுதில்
கைகொட்டிச் சிரிக்கிறது
தன்வழிச்செல்லென அடம்பிடிக்கிறது
பணியமறுத்து என்வழிச்சென்றால்
எனக்கான பொறியை அதுவே தயார் செய்கிறது
எப்போகிலும் அரிதாய் ஒரு பொழுதில்
என்முதுகில் தட்டிக்கொடுத்து பெருமிதங்கொள்கிறது
அத்துளிப் பொழுதுக்காகவேனும்
பாழாய்போன வாழ்கையை
வாழ்ந்து தொலைத்துவிடலாம் போலத்தோன்றுகிறது

- 19 மார்ச் 2010

பதிகம் 07

# கிளிநொச்சி

1.

பெருநகரத்து சுடுகாடுகள்
அணைவதில்லை
அனுதினமும் எரிகிறது
படு வானம்

2.

விறைத்த உடல்
நித்த மரணங்களால் மரத்த மனசு
துயருற
மேற்கிருக்கிறேன்
சிதைமேல் சூரியப்பிணம்
வெறிகொண்ட காலம் களிகொண்டு காலன்
சுவைகண்ட காற்று
ஒன்றுக்கொன்று நன்று
துணைபோகிறது
திசை நான்கிருந்தும் பொறுக்கிவந்த
முகில் கங்குகளை
எரியும் சிதையில் எறிகிறது
காற்று

வானடங்கிலும் குருதி
மேற்கில் அலையும் பறவைகள்
ஒவ்வொன்றாய்
தீயில் வீழ்ந்து அழிந்துபோகின்றன

3.
வனத்தை வளையும் பருந்துகளிடை
நடுங்கும்
சிறு குருவி நான்
எப்போதும் போலவே
கரைந்தொழுகும் என் விழி
வேர் நிலத்தில் அலையும் நினைவு
முப்பாட்டன் காலத்திருந்து
ஏர் உழுத வயல்களில்
இன்று
பெரும்போக அறுவடை
அருவி வெட்டு
சூடு வைப்பு
சூடடிப்பு
நீண்டநிரைகளில் குழிகளை வெட்டிவைத்தது
காத்திருக்கிறார்கள்
நிரவி வழிகின்றன கொம்பறைகள்
பிணங்களால்
எங்கும் துவக்கின் வெடியொலி

சாக்குருவி ஓலம்
அதிகாரக் குரல்கள்
இடையிடையே
ஒப்பாரி
என் ஈரவிழியுள் கரி இருள்
துயிலின்றி உழல்கிறேன்
யுக நீள இரவு

4.
நெடு நாள் கழிந்தது
இன்னொரு காலை
விழிக்கிறேன்
புற்களின் நுனியில் பனி முட்டைகள்
அடைமேல் படுத்திருக்கிறது
சூரியப்பேடை
இனியென்ன
முற்றத்தை கிளறி மேயும்
ஆயிரமாயிரம் நெருப்புக் குஞ்சுகள்

236593

• ஜனவரி 2009

பதிகம் 08

## உயிர்ச் சுடர்

காற்று
ஊதியூதி உலுப்ப
உதிர்ந்த மரத்தில் எஞ்சியது
ஒற்றையிலை

குப்பி விளக்குத் திரிமேல்
அந்தரிக்கும் சிறுசுடர் ஒப்ப
காற்றில் துடிக்கிறது இலை.

மனம் நெருட
வீதியோரத்து மரம் கடந்து

மரணத்தோடு மல்லுக்கட்டும்
நண்பனைப் பார்க்கப் போயிருந்தேன்
என் வயதொத்தவன்
தன் கடைசி நாட்களை எண்ணுகிறான்
வெறுமையில்

ஒரு அழுங்குப் பிராணி
அல்லது
என்தேசத்தை தின்று தீர்த்த ஆயுதங்கள்
ஏதாவது ஒன்றின் சாயலில்
அவனுடலில் அப்பிப் படிந்திருந்தது
மரணவிலங்கு

அறையடங்கிலும்
சாவின் வலியகரங்கள்

உறிஞ்சிப் பருகத் தீரும் மதுக்குவளையென
உடற் கிண்ணத்திலிருந்து
வற்றிக் கொண்டு போகிறது
உயிர்த்துளி

மறுபுறத்தில் தாதியர்
குருதியை பாய்ச்சிக்கொண்டிருக்கிறார்கள்

நம்பிக் கையெடுத்த
எல்லாக் கடவுளரும் கைவிட்டபின்னாலும்
வலிந்து
விழியைத் திறந்து வைத்தபடி இருக்கிறான்
சுய ஓர்மத்தோடு.

வெளியில் வழுவி விழுந்துவிடும் போல்
நடுங்குகிறது
முழி
'என்ன வாழ்கையிது?'
ஒருகணம் சலித்தவன்
துளிப்பொழுதில் அதையழித்து
'இது தான் வாழ்க்கை'
என்கிறான்

எது வாழ்வு?

மீள்கிறேன்
உயரக் கட்டடங்களையெல்லாம் சட்டென விழுங்குகிறது
அந்திக்கருக்கல்

தொடர்கிறதா மரணவிலங்கு?
ஒருவித உறுத்தல்

அச்சம் படர
அடிக்கொருதரம் திரும்பிப் பார்க்கிறேன்
ஓட எத்தனிக்கின்றன கால்கள்

எங்கே
எஞ்சியிருந்த ஒற்றை இலை?

தின்றுவிட்டது காற்று
கல்லறை மீதில் அணைந்த மெழுகுவர்த்தியென
விறைத்திருக்கிறது
மரம்

- செப்டெம்பர் 2009

பதிகம் 09

# தோற்கடிக்கப்பட்ட நிலம்

நின்றது கொடுமழை
வாரோடி
ஊரெங்கும் எங்கும்
வெள்ளம் வடிந்த தடங்கள்
மிகத் துலக்கமாய் பதிந்து கிடக்கின்றன

நெடுநீள இரவுக்குப்பின்
புலர்ந்த
காலையை
ஒரு கிண்ணம்
புதிய தேநீரைப்போல் உணர்கிறேன்
வீதி மருங்கு நெடுகிலும் குருவிக்கூடுகள்

ஒப்ப
காவலரண்கள்
தலையை நீட்டி எட்டிப்பார்ப்பதும்
வெளியில்
இறங்கித் தத்தித் திரிவதுமாய்
இராணுவச் சிறுவர்கள்

விறைப்பு
அச்சம்
இரண்டும் விலகித் துலங்கும் முகங்கள்
குருவிக் குஞ்சுகளை நினைவூட்டுகிறது

இப்பொழுதிவர்கள்
துப்பாக்கியால் கிரிக்கட் ஆடுவது பற்றி
ஆராய்தல் கூடும்

மூன்று தசாப்தம் கொட்டிய கொடுமழையின்
ஈரம்
பாறிவீழ்ந்த பெருமரங்கள்
கட்டடங்கள்

இன்னும்
புதிதாக 'அரச' மரக்கன்றுகள்

அவற்றின் அடிகளிலெல்லாம் முளைவிட்டிருக்கிறது
வெள்ளைக் காளான்கள்
சிறிதும் பெரிதுமாய் ஒவ்வொன்றும்
புத்தன் வடிவம்

இவை
என்னை அச்சுறுத்துகின்றன
மூடிய விழிகளில் சாந்தமும்
உடல் முழுவதும் கொடிய விடமும் இருப்பதாக உணர்கிறேன்
இனியும் வேண்டாம்
எமக்கோர் கொடுமழை

- 27 மார்ச் 2010

பதிகம் 10

# இருள் பெருகும் காலம்

கழிந்தது குளிர்காலம்
காற்றில் மெல்ல எழுகிறது
சிறு வெப்பம்
பனி விலக
மண் துலங்க
புற்களின் மீது படிகிறது
பசுமை.
மீள வந்திறங்குகின்றன பறவைகள்
முகையவிழும் வேனில்
மரக்கிளைகளில்
தத்தித்தத்தி இடந்தேடுகிறது குருவி
எதிரே
கோடை
கோடையைச் சுகிக்கும் வேட்கையில்
என்விழிகள்
வீட்டைச்சுற்றிலும் முகிழ்த்திருக்கிறது
'ரூலிப்' மொட்டுக்கள்
சொட்டும் துளியென ஒவ்வொன்றும்
இரத்தச்சிவப்பு.
கொத்துக்கொத்தாய் கொல்லப்பட்ட உறவுகள் நினைவு.

குழந்தைகள் குருதியில் கோலோச்சியவன் மாண்டுபோனான்
வெறிகொண்டு
வெற்றிச் சதுராடும் மறு ஆக்கிரமிப்பாளனின்
காலடிக்கீழ்
நசியுண்டு கதறுகிறது தோற்கடிக்கப்பட்ட என் தேசம்
வாழும் வழியறியா உறவுகள்
உயிர் பிடுங்கும் வலியுடன் தார்ப்பாள் கூடாரங்களுக்குள்
'காமம் முற்றிக் களிறும் பிடியும் மறிபட்ட நிலமிது'
என
நாளை ஒருகால்
புலவன் இதைப் பாடிச்செல்தல் கூடும்
வாழுமிக்கணத்தில்
'டூலிப்' மலர்களிலிருந்து
உடைத்துப் பெருகிவழியும் நினைவும்
அடங்கமுடியாத் துயரும்

தவிக்கிறேன்

வரண்டு கிடக்கிறது விழிக்குளம்
விழிநீர்த் தடத்தில் பூத்திருக்கு
உப்பு.

• மார்ச் 2010

பதிகம் 11

# ருதுகாலம்

மெல்லத் தவழ்கிறது பிஞ்சுச் சூரியன்
புது வெய்யில்
திருக்கொன்றைக் காடு பூத்ததென
வெளிர்மஞ்சள் நினைவு
இது ருதுகாலம்
காமத்தின் வண்ணம் போலும்
கொத்துக்கொத்தாய் ஊதா மலர்களோடு
'லைலக்'செடிகள்
காற்றெல்லாம் அலைந்து திரிகிறது பூவாசம்
மனம் மருகி மயக்குகிறது
தீராக்காதலும் பெருகிவழியும் காமமும் சொட்ட
பறவைகளின் கீச்சொலிகள்

நான்
நேற்றைய துயரங்களை அலசிப்போட்டிருக்கிறேன்
பின்முற்றக் கயிற்று கொடியில் காய்கிறது
'அழகியதோர் வெய்யில்நாள்' என்றபடி
சூரியக்குளியலுக்கு தயாராகிறாள் அயல்வீட்டுப் பெண்
ஒரு துளி ஆசையெழக் கிளர்ந்த உடல்
எனதூர் வாழ் நண்பனின் "வெய்யில் புரணத்தில்" வற்றி
வடிந்துபோகிறது
நான் அங்கும் இங்குமில்லான்.
என் தேசத்தில் விரித்த போர்க்கண்ணியில் சிக்கிக்கொண்டவன்
காயடிக்கப்பட்ட எருதைப்போல
மூடிய கூரைக்குள் மின் உமிழும் வெளிச்சத்தில்
பாரிய எந்திரங்களோடு பொருதும் வாழ்வு
அல்லும் பகலும் தரமறிந்திலேன்

இன்று நாள் அழகாயிருந்தாலென்ன?
சூரியன் வெறிகொண்டாலென்ன?

எப்படியாவது
கிடந்து தொலையட்டும்....

- ஏப்பிரல் 2010

பதிகம் 12

## முள்ளிவாய்க்கால் 2009

சுட்டுக் கொல்லப்பட்டிருக்கலாம்
அல்லது
தற்கொலை செய்தவனின் மீது
சுடப்பட்டிருக்கலாம்

236593

தப்பியோடும் போது
பின்னாலிருந்து கொன்றிருக்கவும்
அன்றேல்
கூட இருந்தவன் சாகடிப்பதற்கும் சாத்தியங்கள் உண்டு

சரணடைந்தவன் மீது
வன்மம் வெறியாய்க் கொண்டவனொருவன்
கண்ணிமைக்கும் பொழுதுக்குள்

தன்
துவக்கின் வில்லை இழுத்திருக்கலாம்
கைதின் பின்
முரண்டுபிடித்திருக்கவும்
அவனைச் சித்திரவதை செய்திருக்கவும்
அடித்துத் கொல்லவும் வாய்ப்புண்டு

துப்பாக்கிக்குப் பதிலாக கோடரி
அல்லது
வேறு கூரிய கருவியால்
கபாலத்தைப் பிளந்திருக்கும் அநாகரிகம்
எதிரியிடமும் உண்டு

தப்பியோட
அவன் சாயல் கொண்ட வேறொருவனின் பிணம் கூட
இவனாகச் சித்தரிக்கப்பட்டிருக்கலாம்

எல்லாவித சாத்தியப்பாடுகளோடும்
திரை விழுகிறது
மேடையில் கட்டியக்காரன் கும்மாளமிடுகிறான்
'கூத்து முடிந்தது'

இரத்த வெடிலில் கிடந்து தகிக்கிறது
கூத்துக்களரி
மகிழ்வா?
துயரா?
யாருக்கும் தெரியவில்லை
எல்லோர் விழிகளும் நீரால் வழிகிறது

இருள்
கரியஇருள்
இன்னும் கலையவில்லை

•

பதிகம் 13

## மறுத்தல் - (ஒன்று)

நீ கவிதை கேட்கிறாய்
என் நேரமனைத்தையும் பிடுங்கிக் கொண்டன
எந்திரங்கள்.
ஒரு வரி எழுதவும்
அதனை உயரக்குரலெடுத்துப் பாடவும்
தொழிலக இரைச்சல் அனுமதிப்பதில்லை
என் தேசத்தில் முள் வேலிக்குள் சிக்குண்டிருக்கும்
உறவுகள் போலவே
நான் இப்புகலிடத்தில் விலங்கிடப்படாத கைதி
ஒரு மிருகம்
எப்போழுதும்
நுகத்தை விட்டு விலகாதிருக்கவே
இத்தேசம் என்னை அனுமதிக்கிறது

இப்பொழுதில் வாழ்வை இழுக்கவே
நேரம் போதாதிருக்கிறது
என் சொற்களையும்
குரலையும்
காலத்தின் கரங்களில் காவு கொடுத்ததன்
பிற்பாடு
எசமானனின் குரலில் பாட என்னால் முடியாது
வேண்டுமாயின்
சற்று அழ விடு

- செப்டெம்பர் 2009

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

பதிகம் 14

## மறுத்தல் - (இரண்டு)

ஒளிரும் கூந்தலை அள்ளிமுடிகிறது நிலவு
இருள்
மிச்சமாய் இன்னும் ஓரிரு நட்சத்திரங்கள் விசும்பியபடி
தொலைவில்
'தேவன் வருகிறான்' என விழிக்கும்
ஒலிகளிடை
இருளை வெறித்தபடி விழித்திருக்கிறேன்
விழி வற்றவில்லை
இலை உதிர்த்த மரங்கள் கைகளை உயர்த்தி
காற்று வெளியைத் துழாவும் துயரம்
அச்சுறுத்துகிறது
கேள்விகள் நிறைந்து கனத்திருக்கும் மனசு
எத்தனை நாளாயிற்று

ஒரு நல்ல தூக்கம் வாய்த்து
உயிர் அரியும் வலிகளுடன் முள்வேலிக்குள்ளிருந்து
அழவும் அனுமதியற்று வெதும்பும் மனிதர் மீது
மழை
பெருமழை
மாறிமாறிக் கொட்டுகிறது
கழுவ முடியாத பாவச்சுமைகளை
எம்மக்கள் மீதில் விதைத்தவன் யார்?
சாமியாடிச் சாமியாடி சந்நதம் அடங்காப்
பூசாரிகள்
எந்தத் தேவன் வருகைக்காக இன்னும் கூவுகின்றனர்?
மரணத்தின் வியாபாரிகளே ஒழிந்துபோங்கள்!
என் பாட்டன் உழுதநிலத்தில்
இனி
புற்களாவது முளைக்கட்டும்

• செப்டெம்பர் 2009

பதிகம் 15

# பூவரசு

கிழக்கு வேலிக்கரையோரம்
தறித்த பூவரசின் அடிவேர் கிடந்தது
அப்புவின் கடமையின்போது உரிமைக் கட்டைக்காய்
தறித்ததென்றாள்
அம்மா

அப்பா இறந்த போது
தெற்குவேலியிலே நின்ற மூன்று பூவரசுகள்
விறகாச்சு
மூன்றாம் நாள்
காடாற்று கருமம் நிகழ்த்தப் போகையிலும்
கனன்றபடி கிடந்தது
நெருப்பு
பெரிய மாமாவின் பிணத்தின் முன்னிருந்து
ஒப்புச் சொல்லுகையில்
“மகராசா!
படலைக் கரையோரம் நீ நட்ட பூவரசு
கொப்பெறிந்து கிடக்கிறது
உன்கட்டை வேகத்தான் காத்திருந்ததோ ஐயா”
என்றாள் அம்மா

பாதி வயதில் பறிபோன அவள் தம்பிக்கு
கருமம் நடத்துகையில்
என் வீட்டுக் கோடியிலே அவன் நட்ட பூவரசு
மறக்காமத் தறியுங்கோ”
புலம்பினாள்
வாய் ஓயவில்லை

போர் மூண்ட பின்னால்
விறகுப் பஞ்சத்தில்
பின் வளவுத்  தென்மேற்கு மூலையிலே நின்ற
கிழட்டுப்பூவரசை தறிப்பதற்கெண்ணி
கோடரி எடுத்தேன்

“என்கட்டை வேக யார் வீட்டை போவாய் !
உன்னாணை விடமாட்டன் “
மரத்தடியில் குந்திவிட்டாள்.
எவனிட்டான் சாபம்?
ஊர் கலைந்து போயிற்று

நான் ஒரு துருவம்
அவள் பிறிதொரு ஒரு தேசம்
அம்மாவின் சாவறிந்து  பதைபதைத்தோடினேன்
மூலைக்கொருவராய்  நின்றனர் தம்பியர்

மறுநாளில்
அவள் உடல் பார்க்கப் போனோம்
வாய்விட்டுக் கதறி அழக்கூட
அனுமதிக்கவில்லை சூழல்

விடுமுறை நாள் பார்த்து
ஏழாம்நாள் காலை அவள் கருமம்
அன்று
பிணமெரிக்கும் மின் அடுப்புக்கூட செயலிழந்து போயிற்று
தேவாரம் சொல்லி
கற்பூரம் கொழுத்தி
சவப்பெட்டி மேல் வைத்து
கொடுத்துவிட்டு திரும்புகிறோம் உடலை
இன்று
பனி உறையுந் தேசத்தில்
உயிர் உதிரக் காத்திருக்கிறேன்
கூடியழ ஊருமில்லை
என்கட்டை வேக ஒற்றைப் பூவரசுமில்லை
இனி.

• ஜூலை 07, 2010

பதிகம் 16

# சிதம்பர ரகசியம்

நீ இருக்கலாம்
இல்லாமலும் இருக்கலாம்
இருந்தும் இல்லாமல் இல்லாமலும் இருந்தும்
அல்லது தூணிலும் துரும்பிலும்
ஒளிபோல்
எங்கும்
வியாபித்து
எப்படியும் இருக்கலாம்

எதுவாயிருந்தால் என்ன?
உன் பெயரால் வாதங்கள் எத்தனை?
வதங்கள் எத்தனை?
சங்காரங்கள் எத்தனை?

அனல்வாதம் புனல்வாதம் அசுரவதம் கழுஏற்றல் சிலுவை யுத்தம்
புனிதப்போர் சங்காரம் வேள்வி இரண்டாங்கட்டப் போர்
மூன்றாங்கட்டப் போர் இறுதி யுத்தம் இன அழிப்பு
கொலை வெறிக் கூச்சல் ஒப்பாரி அழுகுரல்
அழிவு

பேரழிவு
ஊழி
உன் கூத்தின் முடிவில் என்னதானாயிற்று?
யாரை யார் வதம் செய்தார்
துட்டனைப் புனிதனா?
புனிதனைத் துட்டனா?
துட்டனைத் துட்டனா?
வென்றதனால் துட்டன் புனிதனா?
வீழ்ந்ததனால் புனிதன் துட்டனா?

எதுவாயிருந்தால் என்ன?
நீ சுடலைப்பொடி பூசியாட சாம்பர் மேடாயிற்று
ஒரு தேசம்

இப்போ
இருக்கிறாய் என்கிறார்கள்
இல்லை என்கிறார்கள்
நீ சூக்குமம் என்கிறார்கள்
உனக்கு அழிவில்லை என்கிறார்கள்
மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தாய் என்கிறார்கள்
வான வீதியில் கண்டோம் என்கிறார்கள்

எதுவாயிருந்தால் என்ன?

உன்னருளாலே உன்தாழ் பணிந்தோர்
ஒருவருக்கொருவர் மோதிக் கொள்ளுதல்
காட்டிக் கொடுத்தல்
அகப்பட்டதை சுருட்டிக் கொண்டோடுதல்
உண்டியல் பெட்டிக்கு புதுவண்ணம் பூசுதல்
உனைப்புறம் பேசுதல்
தாங்களே உனதவதாரம் எனப்புளுகுதல்
அடங்கலாய்
அனைத்தும் கண்டோம்
ஆண்டவனே!
மேதகு கடவுளாக உம்மை நீரே நிறுத்தினீர்
தேவரீர்!
நானே எல்லாம் அறிந்தவன் என்றீர்
இன்று நீர் இருக்கலாம் இல்லாமலும் இருக்கலாம்
அது உமக்கே வெளிச்சம்
என் பிரார்த்தனையெல்லாம்
உன் ஊழியக்காரர்களிடமிருந்து பாவிமக்களை
விடுவித்தருளும்
புண்ணியமாய் போகட்டும்
ஆமென்.

• ஜூலை 14, 2010

பதிகம் 17

## எறும்புகள் - சிறு குறிப்பு

எறும்புகளின் வாழ்வு
எளிதல்ல
தினமும் தன் வயிற்றுக்காய் நெடுந்தூரம் நடக்கிறது
நாள் முழுவதும் அலைகிறது
வியர்வை ஒழுக ஓடியோடி உழைக்கின்றது
பேரழிவிலிருந்து
தன் சந்ததியைப் பேண பேரச்சம் கொள்கிறது
மேலும்
ஒவ்வொரு எறும்புக் கூட்டமும் ஒவ்வொரு ஊர்
மனிதர்களைப் போல்
எறும்பூர்கள் இரண்டு மோதுவதில்லை என்பது முரண்தான்
இருந்தாலும்
தனதினத்துக்கு வரும் இடர்ப்போதுகளில்
நீண்ட வரிசைகளில் மூட்டை முடிச்சுகளோடு
ஊர் ஊராய் அலைகிறது
அவை நடக்கிற போதில் கால்களின் வழி

துயர் வழிகிறது
ஒன்றையொன்று சந்திக்கும் தருணங்களில்
ஒரு கணம் நின்று
துக்கங்கெளவ விசாரிப்புகளைப் பரிமாறிக் கொள்கின்றன
ஒதுங்க இடங்களற்று கற்களின் கீழும்
மர இடுக்குகளிடையேயும் தங்கிச் சீரழிகிறது
பெரும் படையெடுப்புகளென
திடீரென எழும் தீயிலும்
மற்றும் வெள்ளப் பெருக்குகளிலும்
அவற்றின் ஊர்கள் சின்னாபின்னப்பட்டு விடுகிறது
ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்டவை போக
எஞ்சியவை
தலைதெறிக்கச் சிதறி ஓடுகின்றன
அகப்பட்ட பொருட்களிலே தொற்றி
நெடுந்தூரம் மிதந்து
புலம் பெயர்ந்து விடுகிறது
பின்னர்
தொடரும் பிறிதொரு அலைவு

புகலிட வாழ்வும் எளிதல்ல
எறும்புக்கும்

•

தமிழ்நதி

பதிகம் 18

# கானல் நதி

தினமும் மரணச் செய்திகளோடு தொடங்குகின்றன
நாட்கள்
கசாப்புக்கடையின் நெடியுடன் விரிகிறது
இணையத் திரை

இன்று காலையில்
எறிகணை கடித்துக் குதறிய
மூன்று குழந்தைகளை கண்டேன்

வெள்ளைத்துணியால் மூடப்பட்ட குழந்தையின் முகத்தை
திறந்துகாட்டு என விழித்து
அதை மிகஅருகாய் படம் பிடிக்கும்
ஒரு மரண வியாபாரியை கண்டேன்

வெறுவான வெளியின் கீழ்
மணல் சொரிய பதுங்கு குழிக்குள்
அடைந்து கிடந்த பதினாறு சோடி கண்களைக் கண்டேன்
பசியால் மெலிந்து ஒடுங்கிய கன்னத்தசைகளிடை
ஒட்டிக்கிடந்தது மரண பயம்

ஒரு இரும்புப் பறவை
குத்தி
எழும்பிய பிற்பாடு
சின்னாபின்னமாகிப் போன உடலின் முண்டம் கண்டேன்
எங்கே தலை ?
தேடுகிறான் அவள் கணவன்

நாயொரு புறம்
சிதறிவெடித்த பெண்ணின் உடல் மறுபுறம்
கூடவே கிடந்தன உயிர்விட்ட பாவி மனிதர்
உடல்கள் கண்டேன்

மார்பிலும் முதுகிலும் துப்பாக்கிகள் குறிபார்க்க
அடிமாடுகள் போல்
மரணத்தின் திசையில் சாய்த்துச் செல்லப்படும்
மனிதர் கண்டேன்

இயலாமையின் ஊற்றில்
பெருக்கெடுக்கிறது
நதி
என்னுள்.

• ஏப்பிரல் 2009

பதிகம் 19

# நெத்தலி ஆறு

1.
முல்லை
காடுகளில் அடர்ந்து கிடக்கிறது
இருள்
வான் வெளியெங்கும் வெறிகொண்டலைகின்றன
எறிகணைக் கழுகுகள்

சூரியன் எழுமுதல்
பரட்டைப் பாலைமர அடியில்
சேலை மறைப்புக்குள்
தூக்கமின்ற உழன்ற பிஞ்சுக் குழந்தைகள் ஐந்தை
மோப்பம் பிடித்து கடித்துக் குதறிற்று
ஒரு எறிகணை
கணப் பொழுது ஒப்பாரி
தவிர
மீதி எல்லாமும் அடங்கிற்று

இப்பொழுது
அவன் இவனென்கிறான் இவன் அவனென்கிறான்

எவன் அடித்த “ ஷெல்” தின்றது
பிஞ்சுகளை

2.
என் தேசத்துக் கொடியில்
புத்தனின் காவி மேல் சிங்கத்தை வரைந்து
அதன் கையில்
கூர்வாளைச் சொருகி வைத்தவன்
முரணை
அவன் வன்மத்தை
என்வென்றழைப்பது

விடுதலை வேண்டிப் புறப்பட்டவன்
குருதி சிவப்பில் கோரப் புலி முகத்தை
சின்னமாக்கி
அதன் முதுகில்
துப்பாக்கிகளை எதற்காக எழுதி வைத்தான்

இரண்டு விலங்குகளும்
காலபேதமின்றி தின்று தீர்க்கிறது
மனிதரை
காணும் திசையெல்லாம் மரண ஓலம்
வீசும் காற்றில்  நர வெடில்

3.

வானம் இரங்காப் பாலை
தகிக்கிறது
மழை வேண்டித் தொடங்கிற்று
சடங்கு

மூன்றாம் நாள் இரவில்
உசுப்பேற்ற உடுக்கடித்தவன்
பாதியிலே எழுந்தோடுகிறன்
சாமியாடி தீமிதித்தவன்
தீ தின்று நீறானான்.

மனிதரை தின்று மனிதரை வென்று
பற்றி எரிகிறது தீ
உலகெல்லாம்

மனிதத் தீ
மரணத் தீ

4.

யுத்த சன்னதம்
அதிர்கிறது
முல்லை

சிவப்பில் பூக்களை உதிர்க்கிறது காடு
இரத்தக் குழம்பென பிணங்களை அள்ளி வருகிறது
நெத்தலியாறு

பாலை மரத்தடியில் குந்தியிருக்கிறான்
கல்லுக் கணபதி
மூன்று தசாப்தமாய் நம்பி கை எடுத்தவள்
கதறுகிறாள்
நீ தெய்வம் இல்லை
யமன்!

அவள் மடியில் பிஞ்சுப் பிணம் இன்னும்
காயாத இளங்குருதி

5.
மொட்டைக் கறுப்பனும் பச்சைப் பெருமாளும்
விளைந்த வயற்களரியில்
எருமைக் கடாக்கள்
நடக்கிறது
உழவு

நேற்றைய பொழுதில்
ஊரைக்கூட்டி எதை விதைத்தனர்

இன்று
அதையே அறுத்தனர்
ஒவ்வொரு குடிலிலும்

சாவேளாண்மை

ஈற்றில்
வடக்கிருந்து நெய்தலை வேண்டுகிறார்
கடலே இரங்கு

பற்றி எரிகிறது
தீ
சுடு மணல்

இனி
செல்வதற்கும்
சொல்வதற்கும் ஏதுமில்லை

- பெப்விரவரி 20, 2009

பதிகம் 20

## கட்டவிழ்தல்

பெய்து கொண்டிருக்கிறது மழை
சிறு விதை
மழையில் நடந்தேன்
நீர் ஊறி
உடல் பருத்து
தலை நிமிர்த்துகிறது
முளை.
வேர் இறங்க
பெரும் தளையென கட்டுண்டு போனேன்

சிறை வாழ்வு
காற்றை இறைஞ்சி கைகளை விரித்தேன்
அகல
தானே வந்தன தளிரும் இலைகளும்
இப்போ
பெருமரமாய் எழும் ஆவல் துளிர்த்தது
எழுந்தேன்
'சும்மா இரு' என்றான் சித்தன்
சும்மா இருப்பது சுமை.
காற்றை மீட்டினேன்
இசைந்தது உலகு
பாடல் கேட்டுப் பறவைகள் வந்தன
பசியாறக் கனிகளைத் தந்தேன்
சுமந்தன பறவைகள்

இப்போ
நான்
நிலத்தில் இல்லை.

- ஓகஸ்ட் 18, 2010

பதிகம் 21

## முதுவேனில் பதிகம்

மண்ணின் மீதும் மனதின் மீதும் மரங்களின் மீதும்
மனிதரின் மீதும் படிந்து கிடக்கிறது
காலத்தின் முதிர்வு

முதிர்வேனில் வெயில்
கிழட்டு மிருகம்
உடல் முறுக்கிப் பசித்து
அலைகிறது

பறவைகள் கடித்தவை  போக
மரங்களின் கீழ்
காயம்பட்டு சிதறுண்டு கிடக்கின்றன கனிகள்
இனி
இலைகள் பழுக்கத் தொடங்கிவிடும்
“பரோல்” லில் விடுமுறை பெற்று
வீடு மீளும் கைதியை ஒப்ப
நான் பெருநகரச் சிறை
விலகி
வெளியே வருகிறேன்
பெரும் கடலென விரிந்து கிடக்கிறது

“எரிக்” வாவி
நீரில் பிறந்த குழந்தைக் காற்று
தளுக்குநடை நடக்கிறது
கைகளை விரித்து அள்ளி ஆழ உறிஞ்ச
வசமிழந்து போயிற்று மனசு

வாவிக் கரையோரம் ஒதுங்கிக் கிடக்கிறது
மீன் ஒன்றின் அழுகிய பிணம்
எடுத்துச்செல்கிறான் துப்பரவுத் தொழிலாளி

மனசு பதகளித்து
நினைவு அலைந்து
உருகிக் கரைந்து
மீள
கரையோரம் நடக்கிறேன்
தொலைவிருந்து வந்த “கூஸ்” பறவைகளின்
குஞ்சுகள்
விடலைகளாகி விட்டன
சிறு தூரப் பறப்புகளை நிகழ்த்தி
இளசுகளுக்கு பயிற்சி கொடுக்கின்றன தாய்ப் பறவைகள்
இனித் தொடரும் குளிர் காலத்தின் முன்
பறந்துவிடும்
நெடுந்தூரம்

உறைபனிக்குள் உழலும் வாழ்வு
அவர்க்கில்லை

காலப்பெருங்கடலின்
சிறு மிடறு நீர் பகல்
தீர்ந்தது

தீ மூட்டி
இருள் விரட்டி
சூழ்ந்திருந்து
வாட்டிச் சுதியேற்றி எடுத்த பறை மீட்டிப் பாடுகிறான்
பாணன்
உயரக் குரலில் எழுகிறது
வடமோடிக் கூத்துப் பாடல்
பறையதிர்வில் வாவி குமுற
அலையெழுந்து நடுங்குகிறது
அதிர்கிறது காடு

மறு காலையில்
“நயாக்கரா” திராட்சை வயல்களை
ஊடறுத்து நடக்கிறேன்
அறுவடை ஆரம்பம்
பழத்தில் வீழும் குருவிகளை விரட்ட

வெறும்
சத்த வேட்டுக்களை தீர்க்கிறது
எந்திரம்

குருவிக்கூட்டமென மனிதர் வீழ
கொடும்போர் நிகழ்ந்த தேசத்திருந்து வந்தவன் நான்

திடுக்குற்று நிமிர்கிறேன்

பயத்தில் உறைந்து  இருள் கரியெனப்படிந்த
என் முகம் பார்த்து
கெக்கலித்து சிரிக்கிறாள்
இவ்வூர்ச் சிறுமி
முடிந்தது விடுமுறை
பசிகொண்ட பூதமென வாய்பிளந்து
காத்திருக்கிறது
பெருநகரம்
மீளாச்சிறைக்குள்
நான்
மீள

- செப்டெம்பர் 30, 2010

பதிகம் 22

# முள்வேலி

இனித் தரித்தால்
உயிர் தரிக்காதென்றுணர்ந்த போது
கலங்கி
மண்தொட்டு
வணங்கி
கடல் கடந்தவன்
இருபதுதாண்டுகள் கழிந்து
மீள வருகிறேன்
எல்லாம் முடிந்துவிட்டது என்கிறார்கள்

எது முடிந்தது?
மாறி மாறிப் பெய்த மழையால் கூட
கழுவப்படாமல் கறைபட்டுக் கிடக்கிறது
தேசம்
மூச்சில் இன்னும் கந்தக நெடி
பல்லி சொல்வது கூட
எந்திர துப்பாக்கி சத்தம்போல் அதிர்கிறது

அச்சம் கலையாத முகத்துடன்
தங்களுக்கான கூடுகளை முடைகின்றன
தூக்கணாங் குருவிகள்

பல்லாயிரக்கணக்கானவரின் மரண ஓலங்களால்
மெழுகப்பட்ட சுவர்களின் மீது
பல்லிழித்தபடி காட்சி தருகிறான்
அரசன்
அவனது பார்வை விலக்கி
சிறுநீர் கழிப்பதற்குக் கூட
என்னால் ஒதுங்கமுடியவில்லை

விதைக்கப்பட்ட ரவைகளில் இருந்து முளைவிட்டிருக்குமோ?
என ஐயுறுவண்ணம்
தேசம் முழுவதும் இராணுவச் சிறுவர்கள்

ஏ–9 வீதியின் மேற்கோரம்
ஒற்றைக்காலை போருக்கு காவுகொடுத்தவள்
உயிர்க்கூட்டை இறுகப் பிடித்தபடி குந்தியிருக்கிறாள்
ஏங்கிய விழிகளுடன்

எதிரே
வீதியின் கிழக்கே
அவள் ஊர்
தென்னைகள் சூழ்ந்த வளவு
போக முடியாத வீடு
காட்டுக் குருவிகளால் கூட
என்னிடம் ஒரு இயல்பான காலையை
அழைத்துவர முடியவில்லை

பேயறைந்தவர்கள் போல்
எல்லோரிடமும்
இருள் கனத்த வெறுமை

இருந்தாலும்
எல்லாம் முடிந்துவிட்டதென்கிறார்கள்
முடிந்ததை பேசுதற்கும் அஞ்சுகிறார்கள்

தீபச்செல்வன்

ஒன்றுமே நடக்காததைப் போலவும்
எதையுமே பார்க்காததைப் போலவும்
நிலத்தின் எல்லையில்
எழுந்து நிற்கிறது
பாரிய தொலைபேசி விளம்பரம்

முடிவாய்
நான் தவழ்ந்த மண்ணில்
ஒருபிடி எடுத்து வரும் ஆவல் உந்த
ஊர் நுழைய முனைகிறேன்

முள் வேலி

இன்னும் சிறைப்பட்டே கிடக்கிறது
என் சிற்றூர்

- ஜுன் 6, 2010

பதிகம் 23

## கட்டில் உழல்தல்

வெய்யில்
விழி உறைக்கும்
கடும் குளிர் காற்றைப் புணர்ந்து சுடும்
இருந்தும் இருள் கவிந்துகிடக்கிறது
ஐந்து முழக் கயிற்றில்
வாழ்வினைத் தொலத்த எருது
தொரன்ரோப் பெருநகர சீ..என். கோபுர கட்டையை
சுற்றிச்சுற்றி வருகிறேன்
கட்டில் சுற்றி இறுகும் போதிலெல்லாம்
மனம் குறுகித் தவிப்பதும்
மீளச் சுற்றி விரிகையில் நெகிழ்ந்து பரவசமாவதுமாக

தொலைகிறது காலம்
என்றோ ஒரு புள்ளியில்
கயிறு முறுகி இறுகி இற்று அறும்

துளி நைப்பாசை
துடிக்கிறது இதயம்
இன்னும்
இன்னும்

இன்றும்

•

பதிகம் 24

## யாதும் ஊரே

இருள் உதிர்ந்து செக்கல் கவிய நுகத்தடி விலக்கி
மீள்கிறேன்
பெருமழைக்கால நதிகளை ஒப்ப
நீளக்கிடக்கிறது
நெடுஞ்சாலை
வளைந்தும் நெளிந்தும் சுழித்தும் வாகனங்கள்
விரவிப் பாயுமிப் பொழுதில்
எதிர்படும் குளிர்காலத்தின்
முதல் பனித் துகள்கள் சொரியத் தொடங்குகின்றன
அகதி உறைவில் இருபது குளிர்காலத்தை கடந்து நடந்தவன்
இருந்தும் ஒவ்வொரு உறைகாலத்தின் தொடக்கத்திலும்
பேரச்சங்கொள்கிறது மனது

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

போர்க்கால ஆயுத்தங்களோடு கணப்பியைச் சரிபார்த்தும்
மதுப்பெட்டியை போதுமான அளவு நிரப்பியும்
எனக்கான பதுங்குகுழியைத் தயார்செய்கிறேன்
இச் செயல்களையெல்லாம் வேடிக்கை பார்க்கிறான்
என் பேரன்
நான் மறுத்தும்
அடம் பிடித்து வாங்கிப்பெற்ற
பனிச் சறுக்கியோடு கிளம்பிவிட்டான்
வடக்கே
பனித்துகள் சொரிந்து நிறைந்த வெண்மலைப்பகுதிக்கு
ஒரு போர்வீரன் போல

அவன் என்ன
என்னைப்போல் வாழ்ந்து தொலைத்துவிட்டுவந்த
ஊரின்
துயருறு நினைவோடு முதுமையைக் கழிப்பவனா?

இது அவன் தவழ்ந்த நிலம்
இனி அவனது தேசம்

•

பதிகம் 25

# பிரளய காலத்துப்பாடல்

சூரியன் நிலவு நட்சத்திரங்கள்
ஏதுமற்ற கருக்கலில் கரையொதுங்கிக் கிடக்கிறது
படகு
துடுப்பும் இல்லை
போனவர்களையும் அறியோம்
நான் பார்த்திருக்க நிகழ்ந்தது
மிகப்பெரும் பிரளயம்
என் எச்சரிக்கைக்கு குரலின்மேல் நின்று
எக்காளமிட்டு சிரித்தான் அரசன்.

இன்று
எங்கே என் குரல்?

எங்கே என் பாடல்?
எங்கே அதை மிதித்தெழுந்த வெறிச்சிரிப்பு?
எங்கே அரசன்?
எங்கே கையறு நிலையில் கலங்கிய மக்கள்?
எல்லாவற்றிக்கும் சாட்சியாக இருந்த நந்திக்கடலே
ஏனிந்த மௌனம்?
போர்விட்ட காலை
உறைந்த குருதித்துளியென தேங்கிக் கிடக்கிறது
அமைதி
படகை நெருங்கவே அஞ்சுமிக் கணத்திலும்
அழல் எழ
நான் விழித்திருக்கிறேன்
ஒரு பாடலற்று
உயரக் குரலற்று
பேச வார்த்தைகளற்று

மதுவின் நுரையில் மரணத்தை கொண்டாடியவர்கள்
மதுக் கலயங்களைக் கவிழ்த்துவிட்டு
எங்கே போகிறார்கள்?

பூக்களோடு!

•

பதிகம் 26

# ஒரு அந்திம காட்சி

இலையுதிர்கால மரங்களின்  கறைகள்
இடையே
இறகுதிர்ந்த கோழியின் உப்பிய உடலினை
ஒப்ப
சிக்குண்டு கிடக்கிறான் சூரியன்

காட்டு நாய்க் கூட்டங்களென
முகில் கங்குகள்
சுழித்தெழும்  காற்றின் துணையொடு
சுற்றி வளைத்து வேட்டையாடுகிறது

வீழ்ந்தான்
கொடும் பகலென சுட்டெரித்த கோடைச் சூரியன்
வேள்வித் திடலென
கண்ணுன்கெட்டிய வரையிலும் வானம்

குருதிச்சிவப்பு
ஒருதுளி மழைகூட இல்லை
இருந்தும் இடித்து முழங்கி முரசறைகிறது வானம்
மேல்வானக் கரையின் கீழ் விளிம்போரம்
வேட்டையில் வீழ்திய இரையை
நாலு புறமிருந்தும் கௌவி இழுத்து
கடித்துக் குதறிப் புசிக்கத் தொடங்குகின்றன முகில்கள்
ஊண் தீரத்தீர கவிகிறது இருள்
என்னிடம் துயருமற்று மகிழ்வுமற்று
அச்சம் உறைந்து
பேயறைந்த மௌனம்

இப்போ சூரியனை விழுங்கிய வேட்டைப்பிராணிகள்
நட்சத்திரங்களென மின்னத் தொடங்குகின்றன

இருந்தும்
இருள் அகலவில்லை

நான் விழித்தபடி இருக்கிறேன்
புதிய புலரிக்காக.

•

பதிகம் 27

# அம்மா

நினைவுகள்
பெரும் சோலைக் காடு
ஞாபகக் கோடரியை தீட்டிச் தோளில் சுமந்தபடி
இருள் வனத்தில் அலையும்
நினைவு வெட்டி
நான்

வனத்தின் அழகு
ஒலியின் மெல்லிய ரீங்காரம்
அதனைப் புறந்தள்ளி
மனதை சுண்டியிழுக்கிறது
ஒரு தாய்க் குருவியின் துயர் நிறை பாடல்
குந்தியின் சரிதம்

அவளென் நினைவுக் கானகத்தின் முதுமரம்
வனநீலி

தன் ஐஞ்சு குஞ்களுக்கும் உணவு தேடி
அலைந்த கதையைச் சொல்லும் போதில்
நாடோடியின் புல்லங்குழலின் பிரவாகம் எழுந்து
மனதைப் பிழிந்து செல்கிறது

கொடிய விலங்குகளிடமிருந்து தன் குஞ்சுகளை
பொத்திக்காத்த கதை பறைகையில்
எழுகிறது
காட்டுப்புயலின் பேரோசை
கானகம் நடுங்க

மௌனம் கனத்த நெடுநீளப் பொழுதுகளில்
அதை அழித்து
இளமை நினைவினை மீட்டுவாள்
சுண்டி இழுக்கும்
ஈர இரவின் ஒற்றைப் பறையொலியில்

வசமிழந்து போகிறேன்

எப்போதாகிலும் அருந்தலாய்
தன் மகிழ்வைப் பாடும் கணங்களில்
மோனக் கடலின் மெல்லிய அலையொலி
மனதை வருடும்

இன்று
பனிப்புலத்தில் உழலும் வனவாசி நான்
தினமும் அலைகிறேன் நினைவுக் கானகத்தில்
துயருறு கணங்களை மீட்டி
எழுகிறது
தாய்க்குருவியின் பாடல்

வாழ்நாள் முழுவதும்
தன் சந்ததிக்கென்றே உழன்றவள்
பொத்தி வைத்திருக்கமாட்டாளா ?

ஒரு துண்டு சேதி
சிறு பொறி ?

• 24 மார்ச் 2011

பதிகம் 28

# கனாவரவம்

எழுவதும் வீழ்வதுமாய் கழிகின்றன
நாட்கள்
பகல் முழுவதும் உடல் சோர்ந்த உறக்கம்
மின் உமிழ் ஒளியில் புலரும் என் இரவு
சபிக்கப்பட்ட வாழ்வு
பெருநகரத்துப் பிரமாண்டத்திலும்
எந்திரங்களின் பேரியக்கத்திலும் ஒட்டி
உழன்று கொண்டிருக்கிறேன்

ஆலை இரைச்சலை அழித்து உடல் அதிர எழுகிறது
பேரொலி
மின் அறுந்து
ஒழியிழந்து
இருளடர்ந்த
துளிக்கணத்தில் தறிகெட்டோடுகிறேன்
உயிர் வேண்டி
இரண்டு போர்விமானங்களின் இரைச்சல்

அடங்க
நெருங்கி வருகின்றன ராணுவ வாகனங்கள்
சீருடை மனிதர்  புரியாத மொழி
எதையோ எடுத்து வீசுகிறார்
வெளியில்
அதிலிருந்து சீறி விரைகின்றன குண்டுகள்

விழி பிதுங்கி புலன் ஒடுங்கி  உடல் பதுங்கி
நகர்கிறேன்
என்மீதில் வீழ்கிறது ஒரு கொள்ளிக்கண் வீச்சு.
பாய்ந்து  வீழ்ந்து
சிறு பள்ளத்துள் பதுங்குகிறேன்
பொறியை திருகி ஒரு கைக்குண்டை வீசுகிறான்
இனி
செத்தேன்
'ஐயோ '

திடுக்குற்று
விழித்த முழிகளை கொத்த
சன்னல்வழிப் பாய்கிறான் வெய்யோன்
"மிட் லான்ட்" வீதியில்  ஹஸினோ' தள்ளி செல்கின்றன
பாரிய வாகனங்கள்

போர் தவிர்த்து
நீள நடந்து
இருபது ஆண்டுகள் கழிந்து
பிழைத்தேன் என்றொரு நினைப்பு
ஒரு கண்கொத்திப் பாம்பென
பின்தொடர்ந்து துரத்துகின்றன
போர்க் கனவுகள்

பெரு வலியெனக் கடந்தது
என் வாழ்வு
இனி
எப்படியாவது போகட்டும்

இன்றென்மனவலியெலாம்
முள்ளிவாய்க்காற் பெருந்துயர் கடந்த
குழந்தைகள் பற்றியது

சிறு பிஞ்சு மனங்களை
இன்னும் எத்தனை ஆண்டுகள்
தீண்டித்தீண்டித் துரத்தப் போகிறது
கொடுங் கனவுப் பாம்புகள் ?

- 23 பெப்ரவரி 2010

பதிகம் 29

# அவர்களையும் வாழவிடு!

அரண்மனை ஒப்ப மாளிகை வீடுகள்
வீட்டின் முன்புறம் சொகுசுக் கார்
ஒன்றல்ல
இரண்டு... மூன்று...

நுழைந்தால்
அகலத்திரை ரி.வி , கம்பியூட்டர்,
உயர் விலைச் 'ஷோபா' இருக்கைகள், சொகுசுப் படுக்கைகள்
'ஹோம் தியேட்டர்' மற்றும்
ஆடம்பர ஆங்கில உபசரிப்பு
உச்சம்

கல்லூரிப்படிப்போடு
இசை, நடனம், கராட்டி, நீச்சல் மற்றும்
கரேபியன் நாட்டில் மருத்துவப் படிப்பு
எனப் பிள்ளைகள் பற்றிய பெருங்கதையாடல்கள்
கல்யாணம், பூப்புநீராட்டு, அரங்கேற்றம், ‘டீபாவீக்யூ பார்ட்டி’
கலைவிழா, கோவில் திருவிழா, ஊர் ஒன்று கூடல்
இத்தியாதி இத்தியாதியெனக்
கழியும் வார இறுதிகள்

இடையிடையே
‘க்யூபா’ ‘புளோரிடா’ ‘கரேபியன் தீவுகள்’ என
உல்லாசப் பயணங்கள்

ஊர்?
வேண்டுமாயின்
ஒருமுறை போய் பார்த்து வரலாம்

தமிழ்?
புதிய தலைமுறை...
ஆங்கிலத்தில் எழுதி கொஞ்சு தமிழில் பேசுகிறார்கள்
அடுத்த தலைமுறை?

236593

கனேடியப் புலத்தில்
மெல்லெனக் கரைந்தோம் தான்
காண் !
இருந்தும் நாங்கள்
பேசிக்கொண்டுதான் இருக்கிறோம்
புலன் பெயர்ந்து
இலங்கை தமிழர்களின் எதிர்காலம் பற்றி
பிறிதொரு யுத்தத்தின் அவசியம் பற்றி
மற்றும்...
மற்றும்...
மற்றும்...

- 21 ஏப்ரல் 2011

பதிகம் 30

## நிலம்

பறவைகள் எல்லாம் போய்விட்டன
இலைகளை உதிர்த்துவிட்ட மரங்களில்
பூத்திருக்கிறது
பறவைகளற்ற வெறுங்கூடு
வெயில் முறுகித் திரைந்த காலத்தில்
கொட்டுகிறது அடைமழை
கொம்பரிலிருந்து அவிழ்ந்து தொங்கும் நீளக்கூந்தல்
காற்றில் அலைய சதிராட்டம் போடுகிறது
வில்லோ மரம்
சிலிர்த்துக் கிடக்கின்றது மலைச்செவ்வந்தி

பூக்களை முகர்ந்து  செல்ல
சிறு வண்ணத்துபூச்சி கூட
இல்லை
நாக்கை தொங்கவிட்டபடி
உலாவத் தொடங்கிவிட்டது குளிர்
கதவை மூடி கணப்பியை முடுக்கி
வெளியை வேடிக்கை பார்கிறேன்
பருவம் அறிந்து
முற்றத்து தோட்டத்தில்
டூலிப்ஸ் முகிழ்களை புதைக்கிறாள்
என் மகள்

இது அவளது நிலம்

- 11 நவம்பர் 2011

பதிகம் 31

# உயிர்த்திருக்கும் மரம்

நிறைந்திருக்கும் பறவைகளால் உயிர்த்திருக்கிறது
மரம்
ஒவ்வொரு தடவையும் சிறகடித்து
எழுந்து
அவை மீளவந்து அமரும் போது
இலைகளை உதிர்த்து
புதுத்துளிர் எறிகின்ற உணர்வெழுகிறது.
கூடுமுடைந்து
இணைகூடிக் குலவுங்காலத்தில்
பூத்துச் சிலிர்க்கின்ற உற்சாகம்
தொற்றிக் கொள்கிறது

குஞ்சுகளோடு
அவை குரலெடுத்துப்பாடும் காலை
மெய்மறந்து தூங்குகிறது
கொடுங்கோடையிலே
குளம் வறள
அவை இரைதேடி அலைகையில்
மனம்சோம்பித் துவழ்கிறது

நிறைந்திருக்கும் பறவைகளால்
இன்றும்
உயிர்ப்போடிருக்கிறது
பட்டமரம்

- 18 நவம்பர் 2011

பொதுசன நூலகம்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

பதிகம் 32

## "நட்புலகு"

உச்சி வெளிக்க உதட்டுக்கு கீழே சிறிதாய்
குட்டித் தாடிவிட்டேன்
'சேரன் என்ற நினைப்போ'
என்றானொருவன்

சரிதான் போடா என்றபடி
தாடையிலே தாடி சற்றுப்படரவிட்டேன்
அச்சொட்டாய்
ஜெயபாலன் போலவே இருக்கிறாய்
என்றான் இன்னொருவன்

அழல் ஏற
காட்டுப்புதர் போல
அதன்பாட்டில் வளரவிட்டேன்.
திடீரென ஒருவன்
தேவதேவன் சாயல் தெரிகிறதென்றான்.

இன்னும் வளர்ந்தால்
அசலில் விகிரமாதித்தியன் நம்பி
என்பார்களோ?

வியப்பாயிருக்கிறது
எனைச் சூழ்ந்த நட்புலகு

மூஞ்சியில் முளைத்த நாலு நரைமயிரைக் கூட
எனதெனக் கொள்ளாருலகில்
வேறு
எதைப் பாட?

•

பதிகம் 33

## வன்னி (2012)

காலக்கொடும்பசி
வெட்டிநிமிர்கிறது மின்னல்
பெருமழை
சுழித்தெழுகிற காற்றுக்கு
ஒரு கிளையைக் காவுகொடுத்துவிட்டு நிற்கிறது
முற்றத்து மரம்

கிளையோடு போயின
குருவிகள் குடியிருந்த சிறு கூடும்
இறகரும்பா குஞ்சுகளும்

என் தலை சுற்றி
கோரக் குரலெழுப்பி
குருவி இரண்டும் வட்டமிட்டு கதறித்தீர்க்க
ஆழக்குழிதோண்டிச்
குஞ்சுப் பிணங்களின் கருமம் முடிக்கிறேன்
கடும்துயர்சூழ
அன்றிலிருந்து...

போனவைதாம்
மீளவேயில்லை
உயிர்ப்பறுந்து வெறும் பாலையாய்
கழிந்தது
மூன்று இளவேனிற்காலம்

இன்று
காலையில்
என் குருவியின் கீச்சொலியில்
திடுக்குற்று விழித்தேன்

ஒருகணம் தலைசரித்து
விழி நிமிர்த்தி
சினேகமாய் குரல் தந்து
அலகில்
புல்லிதழொன்றை சுமந்தபடி
கூடிணக்க செல்கிறது
மறுகிளைக்கு

மறுகா.

- 25 மே 2012

பதிகம் 34

## விண்ணப்பம்

போர்
பெரும் சூறையாய் எழுந்து
சுழற்றி வீசிற்று

வீழ்ந்தேன்
தொறன்ரோ பெரு நகரத்து
பேழை வயிற்றுள்

இன்னும் கிடந்து மாய்கிறேன்
செரிக்காது

பாரிய எந்திரத்தின் சக்கரத்தில் ஒட்டிய
இரும்புத்துண்டென உழன்று உழன்று ஓடி
நசிகிறேன்
பெருந்தெருக்களில்
எதிரும் புதிருமாய் விரையும் வாகனங்களிடை
தவறி வீழ்ந்த துண்டுப் பொதியென
நாலாபுறமும் அடிபட்டலைந்து
சிதறுண்டு போகிறேன்

வின்டர்ப் பனியின் உறைவில்
விறைத்து விறைத்து
உடல் நைந்துபோயிற்று

ஓசோன் பொத்தலில் ஒழுகும் நெருப்பில்
தோல் பொசுங்கி வேகிறது

ஆண்டுகள் இருபது கழிந்தும்
இன்னும் இன்றும் இக்கணமும்
இந்தப் பாழும் உடலைச் சுமந்து சுமந்து
அலைகிறேன்

நடைப்பிணமாய் கனக்கிறது
உடல்

ஒருகால்
இற்றுச் செரித்து
மண்ணில் உரமாய் வீழ்ந்தால்
நாளை
இன் நிலத்துக்குரிய ஒரு மரமாயெனினும்
எழுவேன்

• 4 செப்ரெம்பர் 2012

பதிகம் 35

# பின்னொரு கவிதை

பின் மாலை

முற்றத்து மேபிள் மரத்தின் கீழ்
குந்தி இருக்கிறேன்.

நேற்றுச் சொரிந்த பெருமழையின் தடம்
துளியும் இல்லை

சூரியப் பெட்டை
தன் மாராப்பை அவிழ்த்து வீசிவிட்டு போகிறாள்
துயிலுக்கு

வான்வெளி அடங்கிலும் விரிந்து படர்ந்து
மெல்ல இறங்கி
மரங்களின் மீது படிகிறது
கண்தொடுமிடமெலாம் அந்திச் சிவப்பு

மாலை அழகு மாய அழகு மனது
மயக்கும் அழகு

நான் மருகிக்கிடக்கிறேன்
கவிழ்ந்து கிடக்கிறது மதுக்கிண்ணம்

இனிக்
காலம் உறங்கிவிடும்
நான்கு மாத நெடுந்தூக்கம்

ஒரு அகதிக்கேது உறக்கம்?
உதிரும் வரையிலும் உழல்வதே வாழ்வு

சிறு வண்ணத்துப் பூச்சியென
மரத்திலிருந்து
அவிழ்ந்து
என் உடல் தழுவி மடியில் வீழ்கிறது
முற்றிப்பழுத்த
இலை
இப்போ என் மனம் அவாவுவதெல்லாம்
எப்போ நான் அவிழ்வது
மீள
இம் மண்ணின்
மரமாய் துளிர்க்க?

• 4 செப்ரெம்பர் 2012

பதிகம் 36

## அறம்

இரட்டைக் கோபுரம் நொருங்கிப் பொடிபட
எழுந்தான் அரசன்
உலகதிர.

அவன் நடந்த காலடிக்குள்
நசுங்கிச்
சிதைந்தன பழம்பெரும் தேசங்கள்
இரண்டு.

மூச்சுக்காற்று
பட்ட இடமெல்லாம் பொசுங்கி
நாறிச்
சாம்பலாயிற்று.
மூலம் இவனே என்றுரைத்து

நடு இரவில்
ஒருவனை கொன்று வீசினான்
கடலில்

ஒரு தசாப்தப் பெருநினைவில் கூடிக்
கலைய
கடலிருந்தெழுந்தது
‘சாண்டி’ப் புயல்!

இம்மியளவும் பிசகாது குறிவைத்தடித்தது
மீள
அஃதே இரட்டைக் கோபுரப் பட்டினம் பொடிபட்டு
முடங்க.

அரசன்
அறம்
பிழைக்கின்
புதுப்புது படைக்கலன் இருந்தென்ன
முப்பது முக்கோடி சேனைகள் இருந்தென்ன?

- 30 அக்டோபர் 2012

பதிகம் 37

# சிறை

நான் அந்த ஓவியத்தை வரையத்தொடங்கிய போது
வானம் கருக்கொண்டிருந்தது.
மழை மேகவண்ணத்தால் பின்புலத்தை தீட்டினேன்

காற்று குதிரையில் பாயும் முகில்களுக்கிடையே
சின்னதோர் விரிசல்
ஒளி பாய்ந்தது
அதையே பிடித்து வாயிலில் நிரப்பினேன்
கரிய பறவைகள் தென்திசை பார்த்து ஊடறுத்தன
கம்பிக்கிராதிகளால் கதவு சமைத்தேன்

வீழ்ந்தது இருள்
அதை துரிகையில் தோய்த்து
பெரியதோர் பூட்டுடை தொங்கவிட்டேன்

கொடிய
சிறைக்கூடம் அமைந்தது திரையில்
ஓரிரு நட்சத்திரங்கள் மின்னத் தொடங்கின
இரண்டைப் பிடித்து கண்களில் பொருத்தி
வாயிலில் ஒருவனை காவல் நிறுத்தி
அவனது கைகளில் துவக்கை எழுதினேன்

இருந்தும்
வெறுமை உணர்த்த
தூரிகையை வைத்துவிட்டு
உள்ளே நுழைந்து அமர்ந்துகொண்டேன்.

பார்ப்பவரெல்லாம்
தத்ரூபமாக இருக்கிறது ஓவியம் என்கிறார்கள்

என்
மனசில் பதட்டம் அதிகரிக்க
உள்ளேயிருந்து
தவிக்கிறேன்

திறவுகோலை தீட்டமறந்த நான்.

• 14 டிசம்பர் 2012

பதிகம் 38

## புசி

அசேதனங்கள் பொசுங்கி நாறும்
காற்று.
தூர்ந்து
சிதைந்த பதுங்குகுழி
உடல்சிதறி
திரிபுற்ற முண்டம்
நாய் உருட்ட
இலையான் காகங்களுடன் அலையும்
தலை
குழிக்குள் இறுகிய விழி
குருதி உறைந்து காய்ந்த மதகு

ஆயுதக் கரங்கள் பன்னிரண்டும்
முறித்து
மூளியாய் நிற்கும் கடவுள்
சிலை
இன்னும்
நம்பிக்கையெடுக்கும் முடவன்
பரட்டைப் பாலை
பட்ட மரம்
நிழல் ஓரம்
முலை பொச்சடிக்கும் குழந்தை
நினைவு

நீருற்றி
நெகிழ்ந்து நொதித்து நாறும்
பழைய சோற்றை
அள்ளி விழுங்குகிறள்
தாய்.

- 10 டிசம்பர் 2012

பதிகம் 39

## பின் மழைக் காலம்

அந்தி சாய்கிறது
யன்னலினோரம் வெளியை வெறித்திருக்கிறேன்
இன்னும் மழை.
மரங்களில்
பறவைகள்விட்டுப் போன வெறும்கூடுகள் மேல்
கருமை கவிகிறது.
செம்பழுப்பூறிய இலையுதிர்கால
பறவைகள் போலவே
விடைபெற்றுப் போயிற்று
என்வாழ்வின் பெரும் பகுதி.

தீர்ந்துபோன மதுக்குப்பிபோல
வெறுமை மண்டிக்கிடக்கிறேன்
கொடும் பனிக்காலத்து நெடிய இரவை
நான் கடந்தாகவேண்டும்.
இருள்மண்டி
மனசு துயருறுமிக்கணத்தில்
விளக்கில் ஒளியூட்டி
தன் பிஞ்சு மகவை கைகளில் தருகிறாள்
என் மகள்.
சிறு புலுனிக்குஞ்சென
மெல்லிதழ் நெளித்துப் பூக்கிறாள்
புன்னகை
நீளக் கொடிவிட்டு வீழ்கிறது
மின்னல்
என்னுள்.

• 5 டிசம்பர் 2012

பொது நூலகம்
யாழ்ப்பாணம்.

பதிகம் 40

# இரவின் நதி

இன்று முழுநிலா இல்லை
நல்ல பால்போல் ஒளிர்கிறது வெள்ளிப்பனி

காற்றும் கடும் குளிரும்.
நடுங்குகிறது நிலம்.

கையிழ்ந்த முடம்போல விழித்திருக்கிறேன்
நிலத்துக்கு காவலாய்.

பெரும்கடலென விரிந்து கிடக்கிறது
அண்டம்
இப்போ நான் சிறு மீன்குஞ்சு

ஆழச்சுழியோடி நீந்திக் கடக்கிறேன்
காலத்தை

முடிந்தகாலம் ஈரம்
எதிர்காலம் கனவு
இடையே கண்ணீர்

திடுக்கிட்டு விழித்தபோது

பனித்துகில் போர்வைக் கதகதப்பு
ஆழ்ந்த உறக்கம்
காலடியில் கிடக்கிறது
நிலம்

பதிகம் 41

# குருவிப் பூ மரம்

பனிப் பூ உடை களைந்து
மரங்கள் பச்சைசாத்தும் கணம்
அழகு

குளிர்ப்போர்வையை தூரக் கடாசிவிட்டு
பின்முற்றத் தோட்டத்தில்
இறங்குகிறேன்.

உதிர்வதும்
பின் உருக்கொண்டெழுவதும்
இயற்கையின் அதிசயம் மருந்து.
மரத்தொடு மனசுக்கும்.

இல்லையெனில்
கசப்பின் நோய் படர்ந்து
துயர் மண்டித் துவண்டு மாண்டிருப்பேன்
என்றோ

வெயில் ஏற
நிலத்தோடு கீறி
அழுகி
மக்கிப் படர்ந்த சருகுடல் கிழித்து
மெல்ல எழுகிறது
நான் புதைத்து வைத்த சிறு வித்தின்
சிசு.

குழவியழகு.

மனசு குதிர்ந்து கொண்டாட
தோள்மீதில் வந்து வீழ்கிறது
சோடிச் சிறு குருவி

காதல் மொழிவதும் கூடு முடைவதுமாய்
காதோரம் களிகொள்ளக்
கவிந்து பொழிகிறது வானம் என்னுள்.
பெருகிப் படர்கிறது காலம்

எழுந்து விரிகிறேன்
பெருமரமாய்.

இப்போ
என் கிளைகளில் தத்தித் தவழ்கின்றன
குருவிப் பூக்கள்

இறகரும்ப
மரத்திருந்து அவிழ்கின்றன
குஞ்சுகள்

கட்டறுந்து மிதக்கிறேன்
நான்

•

பின்னுரை 01

# துயர்வெளிக்கவியின் வேரோடிய நிலம்

எளிதிற் கடக்க முடியாமல் தொடர்ந்து ஒரு சாபம்போல மனிதர்களைச் சூழ்ந்திருப்பது துயரம். ஒன்று இயற்கை அனர்த்தங்களின் விளைவாக ஏற்படும் துயரம். மற்றது மனிதர்கள் தாங்களாகவும் தங்களுக்கிடையிலும் உருவாக்கிக் கொள்கிற துயரம். இந்த இரண்டு வகைத் துயரத்திலும் வலியும் வேதனையும் ஆற்றாமையுமே அடிச்சரடுகளாக உள்ளன. எவ்வளவோ அறிவியல் வளர்ச்சிகள் ஏற்பட்டு, மனித வாழ்க்கை இலகுபடுத்தப்பட்ட பின்னும் மனிதர்களின் முன்னாலிருக்கும் சவால்கள் நீங்கிவிடவில்லை. சவால்களின் விசை குறையவுமில்லை. எத்தகைய அறிவியல் விளக்கத்தினாலும் வழிமுறைகளினாலும் துயரத்தின் வலிமிகுந்த கனதியை முற்றாகப் போக்கிவிடவும் முடியவில்லை. பதிலாக மேலும் மேலும் துயரத்தின் வித்துகள் புதிதாக உற்பத்தியாகின்றன, உற்பத்தி செய்யப்படுகின்றன.

என்பதால் துயரத்தின் கனம் அப்படியேதான் உள்ளது. என்பதால்தான் துன்பியலைப் பிரதிபலிக்கும் கலைக்கு மனித மனம் இலகுவில் ஆட்படுகிறது. திருமாவளவனும் துயரத்தில் சிக்கிய ஒரு கவியே. போர், இடம்பெயர்வு, புலம்பெயர்வு, அலைந்துழலும் வாழ்க்கை, அமைதி கொள்ளமுடியா மனம் என வழி நெடுகிலும் வாழ்வு நெடுகவும் துயரத்தினால் சூழப்பட்ட ஒரு கவியாக இருக்கிறார்.

கவிதைகளில் ஈடுபடத் தொடங்கிய காலத்திலிருந்து, இந்தத் தொகுதியில் இறுதியாக எழுதிய கவிதை வரை இந்தத் துயர்ப்பொழிவு திருமாவளவனுக்குள் நிகழ்ந்து கொண்டேயிருக்கிறது. பிரிவின் ஆற்றாமையும் வாழ்க்கையின் நெருக்கடிகளும் அலைச்சலும் நிலைகொள்ளாமற் தவிக்கும் கடந்த கால - நிகழ்கால நினைவுகளும் அவருக்குள் கொடிய வாள்களை கணந்தோறும் ஆழப்பாய்ச்சிய வண்ணமே உள்ளன. இழந்த காதல் அல்லது பிரிவுற்ற காதல், ஊரையும் தாய் நாட்டையும் இழந்த வலி, பெறுமதியும் நிம்மதியுமற்றுக்கழிந்த இளமை எனப் பிரிவாற்றாமை திருமாவளவனைச் சூழ்ந்து வலியேற்றுகிறது. போருக்கஞ்சிப் புலம்பெயர்ந்த (கனடா) நாட்டுப் பெருநகர இயந்திர இயக்கத்தினுள் தானுமொரு இயந்திரமாக்கப்படும் துயரம் அவரைப் பிழிகிறது.

இவைபற்றிய சித்திரங்களை, அனுபவச் செறிவை திருமாவளவன் கவிதைகளாக்கியுள்ளார். இதை இன்னொரு வகையில் சொல்வ தென்றால், இந்தக் கவிதைகளே திருமாவளவனின் அகமும் புறமும். எனில் திருமாவளவனை இந்தக் கவிதைகளில் எந்தச் சலனமுமின்றி நாம் பார்க்கவும் அறியவும் உணரவும் முடியும்.

அண்மைய தமிழ்க்கவிதைகளில் திருமாவளவனுடைய கவி தைகள் பெறுகின்ற இடம் எது? அல்லது வேறுபடுகின்ற தன்மை எத்தகையது?

போரையும் அது ஏற்படுத்தும் வலியையும் போரின் விளைவாக நாட்டை விட்டுப் பிரிந்த துயரையும் புகலிட வாழ்வின் ஒவ்வாமைகளையும் அலைச்சல்களையும் தாய்நாட்டைப்பற்றிய தாகத்தையும் பாடும் கவிதைகள் பலவற்றை நாம் படித்து வருகிறோம். புலம்பெயர் இலக்கியத்தில் பெரும்பாலானவையும் இந்த வகையினவே. இதை விட்டுச் சடுதியாக யாராலும் விலகி விட அல்லது மீள முடிவதில்லை. பிறந்து வளர்ந்த மண்ணிலே வாழ முடியாத நிலையைக் கொண்டதொரு சூழலிலிருந்து வெளியேறிச் சென்றோரின் மனத்தில் வடுக்களும் வலியும் துயரும் வெம்மையும் இருப்பது தவிர்க்கவியலாதது. இதன் நிமித்தமாக அவர்கள் தாய்நாட்டின் மீதான தாகத்தையும் புகுந்த நாட்டில் தம்மை இயைபாக்கிக் கொள்வதில் ஏற்படுகின்ற நெருக்கடிகளையும் வெளிப்படுத்துகிறார்கள். திருமாவளவனும் இவற்றைச் சாராம்சப்படுத்தியுள்ளார். கூடவே தாய்நாட்டின் நிலைமைகளிலும் அங்கு முன்னெடுக்கப்படும் அரசியலிலும் கவிதைகளை உருவாக்கியுள்ளார். கவிதைகளின் மூலமாக இவற்றில் ஒளிபாய்ச்ச முற்படுகிறார். "கிளிநொச்சி, முள்ளிவாய்க்கால் 2009, தோற்கடிக்கப்பட்ட நிலம்..." போன்ற பல கவிதைகள் இந்த வகையின.

இதேவேளை திருமாவளவன் பிறரிலிருந்து சற்று வேறுபடுகிற இடம், தான் வாழும் சூழலில் இயற்கையுடன் தன்னை இணைத்துச் சமனிலை காண முற்படுவதாகும்.

அல்லது இயற்கையில் தன்னை ஆற்றுப்படுத்திக் கொள்வதாகும். இயற்கை மீதான இந்தப் பிரியம் அவரைச் சமனிலைப்படுத்தி, புதுப்பித்து, உயிப் புட்டி, மேலும் விசையுடன், வேகத்துடன் இயங்க வைக்கிறது. பிரிவின் ஆற்றாமையினாலும் வேறு பட்ட நிலங்களின், அங்குள்ள நிலைமைகளின் ஒவ்வாமையினாலும் கொந்தளிக்கும் மனதைச் சமனிலைப்படுத்துவதற்கு இயற்கையே அவருக்குப் பேராறுதலாக உள்ளது. மரங்கள், பறவைகள், பூக்கள், சூரியன், வானம், நட்சத்திரங்கள், காற்று, நிலம், புல், பனி, முகில் என அவர் தோழமை கொள்கின்ற - உறவாடுகின்ற மையங்கள் பல. இந்த

உலகத்தில் எப்போதும் எங்கும் ஆறுதலைத் தரக்கூடியவையாக, உறவாடத்தக்கவையாக . இயற்கையின் அம்சங்களே உள்ளன. இதைத் தானும் உணர்ந்து, நம்மையும் உணர வைக்கிறார் திருமாவளவன். என்பதால் மனிதர்களைப்பற்றிய சித்திரங்களை விடவும் இயற்கை பற்றிய சித்திரங்கள் இந்தக் கவிதைகளில் அதிகமாக உள்ளன. பிறந்த மண்ணின் நினைவுகளைப் பற்றிய கவிதைகளிலும் புகலிடம் பற்றிய கவிதைகளிலும் இயற்கையை உள்ளிருத்தும் திருமாவளவனின் கரிசனையே கூடுதலாக உள்ளது. இவை திருமாவளவனைக் கவனிக்கச் செய்கின்றன. அவருடைய கவிதைகளை வாசிக்கத் தூண்டு கின்றன. மட்டுமல்ல திருமாவளவனின் - அவருடைய கவிதை களின் - அடையாளங்களாகவும் அமைகின்றன. இயற்கை மீதான கரிசனைகளை அதிகமாகக் கொண்டுள்ள கவிஞர்கள் தமிழில் பலருள்ளனர். எனக்கு சோலைக்கிளி, தேவதேவன், கலாப்பிரியா, சு.வி ஆகியோரே அண்மைய தமிழ்க்கவிதைகளில் துலக்கமாகத் தெரிகின்றனர். இன்னொருவர் திருமாவளவன். ஆகவே இயற்கையை மருந்தாகக் கொள்வதன் மூலமாக தமிழ்க்கவிதைகளில் ஒரு மாற்றடையாளத்தை - தன்னடை யாளத்தைத் தருகிறார் திருமாவளவன். மொத்தத்தில், எங்கே நாம் இருந்தாலும் இயற்கை என்ற பேரம்சத்தில்தான் நாம் மையம் கொள்கிறோம், அதில்தான் மையம் கொள்ள முடியும் என்று உணர்த்துகின்றன திருமாவளவனின் கவிதைகள்.

வாழ்வையும் வரலாற்றையும் உணர்ந்த ஒரு படைப்பாளியிடம் அல்லது கவியிடம் குழப்பங்கள் இருப்பது குறைவு.

“முந்நூறாண்டுகள்
உழுதோம்
எங்கள் நிலத்தில் அவர்க்கு

இனியும்
உழுவோம்
அவர்கள் நிலத்தை அவர்க்கே.“

இந்த ஒரு கவிதை போதும் திருமாவளவனின் தவிப்பையும் வாழ்வையும் நாம் உணர்ந்து கொள்ளவும் அறிந்து கொள்ளவும். இது தனியே திருமாவளவனின் அனுபவமோ வாழ்க்கையோ பிரச்சினையோ, துயரமோ அல்ல. புலம்பெயர்ந்த ஒவ்வொருவரின் வாழ்க்கையும் இதுதான். புலம் பெயர்ந்தவர்கள் மட்டுமல்ல ஈழத்தமிழர் ஒவ்வொரு வரின் வாழ்க்கையும் இதுவே. மட்டுமல்ல, இலங்கையர்கள் அனைவரின் வாழ்க்கையும் இதுதான். இலங்கையர்கள் மட்டுமல்ல, வல்லரசு களாலும் வல்லாண்மை பெற்ற பல்தேசிய நிறு வனங்களாலும் நூற்றாண்டுகளாக சுரண்டப்படு

வோரின் வாழ்க்கையும் பிரச்சினையும் இதுவே.

இடங்கள் வேறுபடலாம். காலம் மாறுபடலாம். ஆனால், நிலைமை ஒன்றுதான். முன்னர் படையெடுப்புகளை மேற் கொண்டு, தங்கள் ஆதிக்கத்தைச் செலுத்திய அதிகாரத் தரப்புகளுக்காக அடிமைப்படுத்தப்பட்ட தேசங்களைச் சேர்ந்த - சமூகங்களின் மக்கள் உழைத்தனர். இன்று பல்தேசிய நிறுவனங்களுக்காகவும் வல்லரசுகளின் நலன்களுக்காகவும் சொந்த நாட்டிலும் புலம் பெயர்ந்த நாடுகளிலும் உழைக்க வேண்டியுள்ளது, உழைக்கிறார்கள். அவ்வளவுதான். இலங்கை யிலும் இலங்கை போன்ற நாடுகளிலும் பல்தேசிய நிறுவனங்கள் தொடக்கம், வல்லரசுகள் வரையில் தங்கள் நிறுவனங்களையும் செல்வாக்கையும் நிலத்தையும் சனங்களையும் பிடியில் வைத்திருக்கின்றன என்பதை நாம் இந்த இடத்தில் நினைவிற் கொள்ள வேண்டும்.

தான் ஒரு ஈழத் தமிழர், புலம்பெயர் அகதி, பிற நாடொன்றின் குடியேறி, ஆறாந்திணைவாசி என்று மட்டும் சிந்திக்கவில்லை திருமாவளவன். நூற்றாண்டுகளின் தொடர்ச்சியில் விளைந்த ஒரு ஈழத்தமிழரே தான் என்று பரந்த நிலையிற் சிந்திக்கிறார். வரலாற்றின் பிணைப்பும் பிணக்குகளும் திடீரென நீங்கி விடுவதில்லை. அவற்றின் தாக்கங்களும் தொடர்ச்சியும் அழுத் தங்களும் தொடர்ந்து கொண்டேயிருக்கும். அதை எவ்வாறு ஒரு சமூகம் தன் வாழ்வில் எதிர்கொள்கிறது, அதை புதிய நிலைகளுக்கேற்ப எவ்வாறு உருமாற்றி, நிலைமாற்றிக் கொள்கிறது என்பதைப்பொறுத்தே அந்தச் சமூகத்தின் நிகழ்கால - எதிர்கால வாழ்க்கை அமையும் என்பதை உணர்கிறார். என்பதாற்தான் கையறு நிலையில் தவிக்கும் ஈழத்தமிழ்ச் சமூகத்தை இவ்வாறு பிரதிபலிக்கிறார். நூற்றாண்டுகள் கழிந்தன. எதுவும் மாறவில்லை என்ற திருமாவின் துக்கம் இதன் வழியானதே.

“முந்நூறாண்டுகள் கழிந்தன
நிறந்தான் மாறியது, மொழிதான் மாறியது
ஆயினும் இன்னும் நாங்கள்
அடக்குமுறையின் கீழ்“

என்று அ.யேசுராசா எழுதியதைப்போல இன்னொரு தளத்தில் இன்னும் ஆழமாக கவிச் செம்மையோடு எழுதுகிறார் திருமாவளவன்.

திருமாவளவனின் கவிதைகள் மூன்று திரட் டுகளாக ஏற்கனவே வெளியாகியுள்ளன. இது நான்காவது திரட்டு. இந்த நான்கு திரட்டுகளிலும் உள்ள அநேக கவிதைகளில் உள்ள பொதுத்தொனி என்பது, முன்னரே குறிப்பிட்டுள்ளதைப் போன்று

பிரிவும், துயரும் வலியின் முனகலும் ஒவ்வாமையின் வெளிப் பாடுகளுமே. நெருக்கடிகளையும் அபாயத்தையும் விட்டு நீங்கிப் பாதுகாப்பும் வளமும் நிறைந்த (கனடா) தேசத்துக்குப் பெயர்ந்து அங்கே நிரந்தர வதிவிட அந்தஸ்தைப் பெற்றாலும் உள்ளே கொந்தளித்துக் கொண்டிருக்கும் துயருறு மனம் நீங்கவில்லை.

புலம்பெயர் படைப்பாளிகள் பலருடைய நிலை பெரும் பாலும் இப்படித்தானுள்ளது. புறம் ஒன்றாகவும் அகம் இன்னொன்றாகவும் இருவேறு நிலைகளில் துடித்துக்கொண்டு. இதுவரையான பெரும்பாலான புலம்பெயர் இலக்கியம் இந்தச் சாரம்சத்திற்தானிருந்தது. ஆனால், புலம்பெயர் படைப் புகள் இரண்டு வகையில் கிளைக்கும் நிலை இப்பொழுது உருவாகியுள்ளது. ஒன்று திருமாவளவனைப் போன்று, தாய்நாட் டின் நினைவுகளும் புலம்பெயர் தேச வாழ்வுமாக அமைந்தது. தாய்நாட்டில் பிறந்து, வாழ முற்பட்டு, தொடர்ந்தும் வாழ முடியாத சூழலில் வெளியேறிச் செல்ல வேண்டியிருந்த நிலையை - ஆற்றாமையை தன் மையத்திலிருந்து நீக்க முடியாமல் தத்தளிப்போடு வைத்திருப்பது. அத்துடன் புகலிடத்திலும் நிலைகொள்ள முடியாமல் தத்தளிப்பது.

மற்றது, புலம்பெயர் தேசத்தைத் தமது தாயகமாகக் கொண்ட இளைய தலைமுறையினரின் படைப்புகள். இந்தத் தலை முறையினருக்குத் தாங்கள் தற்போதிருக்கும் நாடே சொந்தத் தாயகம். அங்குள்ள மக்களே உறவினர்களும் நண்பர்களும். அங்கு வாழ்ந்த, வாழ்கின்ற அனுப வங்களே அவர்களுக்குக் கிட்டுகிறது. அதுவே அவர்களிடம் முதன்மையடைகிறது. எனவே அவர் கள் தாங்கள் வாழ்கின்ற களத்தை மையப்படுத் தியே சிந்திக்க முனைகிறார்கள். அதையே அவர் கள் வெளிப்படுத்துகிறார்கள். இவர்களுக்கு ஈழ நினைவுகள் அத்தனை வலியதாக இருக்கப் போவதில்லை.

ஆகவே, இந்த இருநிலைப்பட்ட படைப்புகள் கிளைக்கும் காலம் இப்பொழுது உருவாகியுள்ளது. இதில் முதல் தலைமுறையினரிடம் உள்ள சிறப்பு, அவர்கள் தமிழிலக்கியத்திலும் புலம்பெயர் இலக் கியத்திலும் ஒரு இணைப்பை - கலப்பம்சங்களை உருவாக்குவோராக உள்ளனர். புலம்பெயர் தேசத் தில் பறவையொன்றைக் காணும்போது அவர்க ளுக்கு தங்கள் தேச நினைவு கிளர்கிறது. மரங்கள், ஆறுகள், தெருக்கள், வானம், பனி என எதையும் தங்கள் தாயகத்துடன் இணைத்தே பார்க்கிறார்கள், உணர்கிறார்கள். இரு புலங்களைப் பற்றிய அறிதலும் அனுபவமும் இருப்பதால் இவர்களால் இத்தகைய சாத்தியங்களை உருவாக்க முடிகிறது.

இதற்கு திருமாவளவனின் இந்தக் கவிதைகளிலும் ஏராளம் இடங்கள் உண்டு. ஏன் இந்தக் கவிதைகள் முழுவதிலும் இந்த அம்சத்தை நாம் அவதானிக்கலாம்.

இதனால், தமிழிலக்கியத்திற்குப் புதிய திணைக்காட்சிகளும் உள்ளீடும் கிடைக்கிறது. திருமாவளவனின் கவிதைகள் இந்த இருநிலைகளையும் வெகு சிறப்பாகப் பிரதி பலிக்கின்றன.

இலங்கையின் கொந்தளிப்பான காலகட்டத்தில் இளமைப் பருவத்தைக் கொண்டிருந்தவர்களில் ஒருவர் திருமாவளவன். இன ஒடுக்குமுறையும் அதற்கெதிரான போராட்டமும் இனப்போராக மாறிய சூழலில் வாழவேண்டிய, எழுத வேண்டிய நிலையைக் கொண்டவர். என்பதால் இந்தக் கொந்தளிப்பு திருமாவளவனின் கவிதைகளிலும் உண்டு. ஆனால், சமனிலை குழம்பாதவர். எந்தப் பக்கமும் இழுபடாதவர், சாயாதவர். என்பதால் திருமாவளனின் கவிதைகள் கால நீட்சியைக் கொண்டிருக்கும் இயல்பை அதிகமாகக் கொண்டுள்ளன. எனினும் அதையும் மீறிச் சமகால ஈழப்பரப்பிற்குள் மட்டும் அடங்கி உறைந்து விடும் சில கவிதைகளும்அவரிடம்உண்டு. இதைத்தவிர்த்தால்திருமாவளவன் ஈழக்கவிஞர்களிலும் ஈழக்கவிதைகளிலும் முக்கியமான ஒரு அடையாளமாகவே உள்ளார். ஆனால், திருமாவளவன் என்ற பெயர் ஒரு தமிழ்நாட்டிலுள்ள ஒரு அரசியற் தலைவரின் பெயர் என்ற அளவிலேயே பெரும்பாலான தமிழ் ஊடகங்களாலும் தமிழ்ச் சனங்களாலும் விளங்கப்படுகிறது. இப்படி யான கீழிறக்க நிலை தமிழ்ச்சூழலில் ஏராள முண்டு. "நெடுநீள் பண்பாட்டுப் பேறுடைய தமிழில்" நல்ல படைப்பாளி, நேர்மையான சமூகச் செயற்பாட்டாளர், ஆற்றல் நிரம்பிய மனிதர்களின் இடம் மதிப்படைவது குறைவு. புற நீங்கலாக இத்தகையவர்கள் கண்டுகொள்ளப்பட்டால் அது காலம்பிந்திய ஒன்றாகவே இருக்கும். பாரதி, புதுமைப்பித்தன் தொடக்கம் அ.செ.மு, மகாகவி வரை இதுவே கதி. இந்த இடத்தில் ஒன்றைக் குறிப்பிடலாம் என எண்ணுகிறேன். சமகாலச் சூழலில் சேரன், ஜெயபாலன், திருக்கோவில் கவியுவன், உமா வரதராஜன், ரஞ்சகுமார் என இளவயதுடைய சில படைப்பாளிகளையும் கவிஞர்களையும் கா. சிவத்தம்பி தமிழ்ப்பரப்பில் அறிமுகப்படுத்தியிருந்தார். சிவத்தம்பியின் இந்த அறிமுகமாக்கலைப்பற்றிய விமர்சனங்கள் பலரிடமுண்டு. ஆனால், சம காலத்தில் இந்தப் படைப்பாளிகளும் கவிஞர்களும் கூடிய அளவில் தமிழ்ப்பரப்பில் அறியப்படுவதற்கும் முக்கியமான வர்களாகக் கருதப்படுவதற்கும் அவருடைய அறிமு கம் உதவியது என்பதை மறுக்க முடியாது. 'குறிப்

பிட்ட கவிஞர்களும் படைப்பாளிகளும் படைப்புத்திறனில் முக்கியமானவர்கள். அவர்களுடைய படைப்புகளின் வீரியம் அவர்களை அறிமுகப்படுத்தும். நல்ல படைப்பின் அடிப்படையே அதுதான்' என்று இதை யாரும் இன்னொரு தளத்திலிருந்து வாதிடலாம். வைரத்தைப் பட்டை தீட்டி ஒளிர வைப்பதற்கு ஒரு கலைஞர் (விமர்சகர்) தேவை. தமிழில் மஹாகவி, விபுலாநந்தர் உள்ளிட்ட பலரையும் வெவ்வேறு காலங்களில் இந்தமாதிரியான நிகழ்ச்சிகளின் மூலமே தமிழ்ச்சூழல் கண்டறிந்தது.

எனவே இத்தகைய ஒரு அறிமுகமாக்கல் நிலை தவிர்க்க முடியாமல், ஒவ்வொரு படைப்பாளிக்கும் படைப்புக்கும் தேவை. இது வணிகமயம் உச்சநிலையில் தாவிச் செல்லும் காலம். போட்டியும் புனைவும் நிறைந்த சூழல். பல கோடி விதைப்புகளின் மத்தியில் புதிதொன்றைக் காண்பதற்கு ஞானக் கண் வேண்டும். இல்லையெனில் குறிகாட்டி அவசியம். திருமாவளவின் கவிதை களைக் குறித்து, சி. சிவசேகரம், ராஜமார்த்தாண்டன், வெங்கட் சாமிநாதன், க. மோகனரங்கன், சேரன் உள்ளிட்ட முக்கியமான ஆளுமைகள் எழுதியிருக்கிறார்கள். தமிழ்ச் சூழல் தன்னுடைய ஞானக்கண்களாலும் குறிகாட்டி களாலும் திருமாவளவனையும் அவருடைய கவிதைகளையும் மேலும் மேலும் கண்டடையட்டும். புதிய உலகங்களைச் சென்றடையட்டும்.

• கருணாகரன்

பின்னுரை 02

# இரு மழை நாட்களுக்கு இடையில்

இன்று பெருமழைக்கான ஆரவாரங்களோடு மெல்லிய தூற்றல் தொடங்கிவிட்டது. இதுபோன்றதொரு மழைதொடங்கிய நாளில் 'இருள்யாழி' திரட்டுக்கான என் பின்னிணைப்பை முடித்துவிட்டு நனையச் சென்றேன்.

இடைப்பட்ட இந்த ஐந்துவருடங்கள் எத்தனையோ பெரு மழைநாட்களும் கொடுங் கோடை வெயிலுமாய் கழிந்தது, இடையே எவ்வளவோ இடர்கள் யுத்த அவலங்கள் மனிதப் பேரழிவுகள் எல்லாம் கடந்துபோயிற்று.

காலம் எல்லாவற்றையும் அழித்து தினமும் புதிய புதிய நாட்களைத் தருகிறது.

கவிஞர்களே வார்த்தைகள் அற்று வாயடைத்து நிற்க பல்லாயிரக் கணக்காண உறவுகளைகளைக் காவு கொடுத்தோம். மனிதர்களை மந்தைபோல் விரட்டிச் சென்று கசாப்புக்கடை முன்றலில் நிறுத்தினான் இடையன். எத்தனை தடவை எச்சரித்தும் யார்குரலும் அவன் செவியில் ஏறவில்லை. அவன் யுத்த வெறியில் உன்மத்தம் கொண்டிருந்தான். கொடுங் குளிரையும் புறந்தள்ளி ரொரண்றோ நகர வீதிகளில் உயரக் குரலெடுத்துக் கதறியும் உலகின் சிறு கண்ணசைவைக்கூடப் பெறமுடியவில்லை.

ஈற்றில் அது நடந்தேறிவிட்டது. அழிவு. பேரழிவு. ஊழிப்பெருங்கூத்து..

என் பள்ளிப் பராயத்தில் தொடங்கிய போராட்டம் எங்கெங்கோ அலைந்து திசைமாறிக் கைமாறிக் கதைமாறி நான்காம் தலைமுறையில் முடிந்திருக்கிறது. யார் தொடங்கினார்கள் ஏன் தொடங்கினார்கள். எங்ஙனம் தொடங்கினார்கள் என்ற விபரம் முடித்தவர்கள் அல்லது முடிந்தவர்களுக்கு தெரியாது.

உண்மையில் முடிந்ததா? புரியவில்லை. இன்று வென்றவர்கள் முடிந்ததாகத்தான் கொண்டாடு கிறார்கள். கொண்டாடும் மனநிலையில் உள்ளவர்களிடம் தோற்றவர்கள் எதை எதிர் பார்ப்பது?

ஆனாலும் வாழ்வு வலியது. செம்மறி மேய்ந்த வேர்க்கட்டை யிலிருந்து துளிர்விடும் புல்லரும்பைப்போல கரியசாம்பரை விலக்கி மெல்லப் பச்சை படியத்தொடங்குகிறது. அதுவே இன்று எஞ்சியிருக்கும் நம்பிக்கைத் துளி.

ஒரு கொட்டைபாக்குக் குருவியைப் போன்ற என் சின்னக் கிராமம் இன்னும் முள் வேலிக்குள்தான் சிறைப்பட்டுக் கிடக் கிறது. ஊர் பற்றிய என் கனவுகளும் நம்பிக்கையும் தூர்ந்த பாழ்க்கிணறு போலாயிற்று. இப்போ இரவில் தோன்றும் கனவுகளில் கூட ஊர் தென்படுவதில்லை. இந்தப் பனிவயல் பெரியதொரு மாயவெளி. புதைசேறு. இதற்குள் சிக்குண்டு வெளிவரமுடியாது தவிக்கிறது இந்த மனசு. இந்தத் தத்தளிப் லேயே என் காலம் நகர்ந்து கொண்டிருக்கிறது. என் நாட்களை நகர்த்திக் கொண்டிருக்கிறேன்.

தமிழில் பருவங்கள் ஆறு. வாழ்விலும் அதுவே. இப்போது எனக்கு முதுவேனில். அஃதே இத் தலைப்புக்கான காரணி. எனதூர்க் கொத்தி ஆலடிச் சுடலையில் என் கட்டை வேகும் என்பதெல்லாம் வெறும் கனவு. எங்காவதொரு முதியவர் விடுதியின் சன்னலோரத்திலிருந்து கொட் டும் பனியை விழித்தபடி தனிமையை விறைத்தபடி கடப்பதற்கான மன வலுவை வளர்த்து வருகிறேன். இதில் இனி எந்தவித ஆட்சேபனைகளும் இல்லை.

இந்த அவசர உலகில் வேறு எதிர்பார்ப்புகளுக்கு இடம் வைக்கக்கூடாது. மழைநீர் போல அதன் திசையில் ஓடி அடங்கவேண்டியதே நியதி. இந்த மனவோட்டத்தின் வெளிப்பாடுதான் இந்தத் திரட்டு முழுவதிலும் அடங்கியிருக்கிறது. சலிப் பூட்டுகிற வாழ்வு. இக்கவிதைகளும் அப்படியே. எனவே மேலும் சலிப்பூட்ட இதற்கு ஒரு பின்னிணைப்பு தேவையா என்ற எண்ணம் எழவே செய்கிறது.

இப்புகலிடச்சூழலில் வாராவாரம் புத்தக வெளி யீடுகள் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. அதிலும் கவிதைத் தொகுப்புகள் என்ற பகுப்புக்குள் அடங் குபவையே அனேகம். அந்தளவுக்கு கவிதை இலகுவாகிவிட்டதா என்கிற கேள்வி எனக்குள் எழாமல் இல்லை. இப்போ அஃதொரு “பாஷன்” போலாகிவிட்டது. அல்லது சடங்காகிவிட்டது.

இப்போதும் இத்திரட்டிலிருக்கும் இவற்றை கவிதைகள் என்று சொல்ல முடியுமா என்ற தயக் கத்தோடுதான் இதை எழுதிக் கொண்டிருக்கிறேன். ஒரு கண்கட்டு வித்தைக்காரன் போல புதிய புதிய தரிசனங்களை கவிதை கண்டடைந்தபடி முன்னே செல்கிறது. சீதைக்கு முன்னே தோன்றிய பொன் மானைப் போல அது எனக்கு போக்குக் காட்டுகிறது. அதைத் துரத்திச் செல்லும் முயற்சியிலேயே என் பெரும் பொழுது கழிகிறது.

அதிசயமாய் ஒரு மாயப்பொழுது வாய்த்தால் கூட அதை என்னால் எட்டிப் பிடித்துவிட முடியும் என நம்பவில்லை. ஆனாலும் அதைத் துரத்துகின்ற பராக்கில் என் வாழ்வின் சுமையை அதன் வலியை என்னால் மறக்கமுடிகிறது. எனவே எனக்கு கவிதை என்பது வலி நிவாரணி. அவ்வளவுதான்.

இது என் நான்காவது திரட்டு. இருந்தும் என் முதற் திரட்டுக்கான பயம் பக்தி பதற்றம் பரிதவிப்பு போன்ற மனநிலையோடுதான் உங்கள் முன் வைக்கிறேன். என் வழமையைப் போலவே இந்த இடைப்பட்ட நான்காண்டு காலத்தில் எழுதிய எல்லாக் கவிதைகளும் இதில் அடங்கியிருக்கின்றன. இதில் எனக்குத் தெரிவுகள் கிடையாது.

இந்தத் தொகுப்பை வெறும் வணிகத்தனம் அல்லாது இலங் கையில் வெளியிட வேண்டும் என விரும்பினேன். அதற்கான முயற்சிகள் தொடங்கி வருடம் ஒன்று கடந்தது. இனி நடக்காது எனச் தோற்றுச் சோர்ந்த சமயத்தில் எப்படியோ இப்போதிது கைகூடியிருக்கிறது. இதை வெளியிட ஆர்வங்கட்டிய பா. அகிலன், "தூண்டி" செல்வமனோகரன் இருவரும் என் அன்புக்குரியவர்கள். அது தோற்றுப் போனமை என் துரதிஷ்டமே.

இதன் அட்டைப் படத்தை வடிவமைத்த கவிஞர் ரஷ்மி மற்றும் கவிஞர் சேரன், க. நவம். போன்றவர்கள் நான் மிக உரிமையோடு பேசக் கூடிய நண்பர்கள். இத்தகையோர் வாய்த்தது என் பெரும்பேறு.

இப்போ எனக்கு அடிக்கடி ஊக்கந்தருவதோடு என்விருப்புக்கிசைந்தபடி இதன்முழுச்சுமையோடும் புத்தகமாக கொண்டுவரும் கவிஞர் கருணாகரன் என்றும் என் நன்றிக்குரியவர். அவர் இல்லையேல் இப்போதைக்கு இத்திரட்டு சாத்தியமில்லை.

ஒரு கவிஞனுக்குரிய எல்லா மனஉணர்வுகளை யும் கொந்தளிப்புகளையும் கொடுவினைகளையும் பெரிதுபடுத்தாது என்னை சுமக்கின்ற என் குடும்

பத்தினர் எல்லோர்க்கும் என் அன்பு முத்தங்கள்.

இப்போ இடித்து முரசறைந்து எட்டுத்திக்கும் முழங்கிப் பெய்கிறது மழை.

நன்றி

• திருமாவளவன் (கனடா)

மகிழ் வெளியீட்டகத்தின் ஏனைய நூல்கள்

1) ஒரு பொழுதுக்குக் காத்திருத்தல்
- கருணாகரன்

2) ஒரு பயணியின் நிகழ்காலக் குறிப்புகள்
- கருணாகரன்

3) யாழ்ப்பாணமே ஓ யாழ்ப்பாணமே
- நிலாந்தன்


4) எதுவுமல்ல எதுவும்
- கருணாகரன்

5) மறுவளம்
- எஸ். கிருஷ்ணமூர்த்தி

6) முதுவேனில் காலம்
- திருமாளவன்

236593

[illegible]
[illegible]




## அன்றிலிருந்து

பசி மறந்தேன்
தூக்கம் மறுத்தேன்
திசையில் அலைதல் விரும்பிற்று மனம்
சூனியத்தில் விழிகளின் தேடல்
கனவுகள் மட்டும் பெருகிக்கொண்டே வந்தன
எனக்கான சிலுவையை நானே புனைந்தேன்
வற்றத் தொடங்கிற்று காலம்
இனிக் காத்திருப்பு சாத்தியமில்லை
எனக்கு வெளிச்சம் வேண்டுமாயின்
என்னை
நான்
எரித்துத்தானே ஆகவேண்டும்

0